Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

THINAMURASU

தினப்பதிப்பு

முரசு - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | தை 14 ஞாயிற்றுக்கிழமை (27.01.2013) | பக்கங்கள் 20 | ஓசை - 119

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)
















# அரசியல் உதைபந்தாக செயற்படாது இலங்கை

## கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகளின் அரசியல் உதைபந்தாக இலங்கை செயற்படாது. பாரிய வளங்கள் மற்றும் ஊடக வலையமைப் பின் ஊடாக இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க சில சக்திகள் முயற்சித்து செய்து வருகின்றன. பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய நாடு என்ற ரீதியில் உலக சமூகம் இலங்கைக்கு அனுதாபத்துடன்கூடிய ஒத்துழைப்பையே வழங்க வேண்டுமென அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் என்.டி. தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். அந்த நேர்காணலில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்த இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பீகார் மாநிலத்தில் உள்ள புத்தகாயாவுக்கு செல்லவுள்ளார். இந்திய அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஐ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

புத்தகாயாவில் உள்ள மகாபோதி ஆலயத்தில், இலங்கையில் அமைதி மற்றும் அபிவிருத்திக்காக வழிபாடு நடத்தவே மகிந்த ராஜபக்ஷ புத்தகாயாவிற்கு வரவுள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாளை அமைச்சரவையில் மாற்றம் இறுதித் தீர்மானம் இன்று?

(கொழும்பு)

பல மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு வரும் அமைச்சரவை மாற்றம், நாளை இடம்பெறுமெனவும் இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படும் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போது 8 துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரத்துறை, விளையாட்டு, தொழிற்சங்கம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சுக்கள் இதன்போது விசேட கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த காலங்களில் மிகவும் சர்ச்சைகளுக்கு உட்பட்ட அமைச்சுக்களையும் மாற்றத்துக்கு உட்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன் அமைச்சரவைக்குள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கச்சதீவு உற்சவத்தை சிறப்பாக நடத்த உத்தியோகபூர்வ ஏற்பாட்டு கூட்டம்

### - அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நடந்தது -

(யாழ்ப்பாணம்)

பிரசித்தி பெற்ற கச்சதீவு, புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி நிறைவடைகின்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ ஏற்பாட்டுக் கூட்டம் நேற்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ். குருமுதல்வர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம், யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, வடபிராந்திய பிரதி கடற்படை கட்டளைத் தளபதி கொமடோர் ஏ.எஸ்.விமலதுங்க, இந்திய உயர் ஸ்தானிகராலய ஆலோசகர் ரீ.ராஜமாணிக்கம், நெடுந்தீவு பிரதேச செயலாளர் சிறி, நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் தானியேல் றெகசியன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் ஆகியோருடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கைப் போக்குவரத்து சபை ஆகியவற்றின் உயரதிகாரிகள், தேவாலய பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் உள்ளிட்ட பங்கு நிர்வாகிகள், தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க தூதுக்குழுவை சந்தித்தது கூட்டமைப்பு



(கொழும்பு)

இலங்கை வந்த அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம் பெற்றது. நேற்று நண்பகல் அமெரிக்க தூதராலயத்தில் மதிய உணவு விருந்துடன் நடைபெற்ற இச்சந்திப்பு 1.00 மணியிலிருந்து 2.40 மணி வரை நீடித்தது என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்புத் தூதுக்குழுவிற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரான்ஸில் வாள்வெட்டு; பருத்தித்துறைவாசி பலி

பிரான்ஸ் நாட்டில் இலங்கைத் தமிழர் ஒருவர் கண்ட துண்டங்களாக வெட்டப்பட்டு குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த திங்கள் அதிகாலை 3 மணி 30 நிமிடம் அளவில் பிரான்ஸ் ivry sous seine என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வெட்டி வீசிய நிலையில் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளார்கள். இவர் வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரும்பு சேகரிக்கச் சென்றவர் கண்ணிவெடியில் சிக்கிப் பலி

### நாகர்கோவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாதுள்ளமையினால் குறித்த இளைஞனின் சடலத்தை மீட்க முடியாதுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை, மூன்று இளைஞர்கள் குறித்த பகுதிக்கு இரும்பு சேகரிப்பதற்காகச் சென்றுள்ளனர். இதன் போதே நிலக்கண்ணி வெடி வெடித்துள்ளது.

இதனால் மேற்படி மூன்று இளைஞர்களில் ஒருவரான செல்வம் தவசீலன் (வயது - 24) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் அவரின் சடலத்தை அங்கேயே விட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளனர்.

இவ்வாறு தலைமறைவான இருவரில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். நாகர்கோயிலைச் சேர்ந்த ம.அருள்தாஸ் (வயது - 37) என்ற குடும்பஸ்தரே பருத்தித்துறை பொலிஸாரினால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தாவடியில் அதிகாலை வேளை இரண்டு வீடுகளில் கொள்ளை

(திருநெல்வேலி)

தாவடி வடக்கில் இரண்டு வீடுகளில் அதிகாலையில் களவு நடைபெற்றுள்ளது. தாவடி மானிப்பாய் வீதியிலுள்ள வைத்தியர் ஒருவர் அதிகாலை 4.00 மணியளவில் வீட்டின் பின்புறம் குளித்துக்கொண்டிருந்த போது முன்பக்கத்து அறைக்குள் நுழைந்த திருடன் அறைக்குள்ளிருந்த சிறுதொகைப் பணம் மற்றும் சில பொருட்களைத் திருடிக் கொண்டு சென்றுள்ளான்.

வைத்தியர் வீடு என்பதால் எவரோ வைத்தியத்திற்கு வந்துள்ளார்கள் என எண்ணி திருடன் மீது எவரும் சந்தேகம் கொள்ளவில்லை. குளித்து முடித்து வைத்தியர் முன்பக்கம் வந்தபோதே திருட்டுப்போனது அவருக்குத் தெரியவந்தது.

தாவடி வன்னியசிங்கம் வீதியிலுள்ள மற்றொரு வீட்டிலும் இதே பாணியில் அதிகாலை 4.00 மணிக்கு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அறைக்கதவைத் திறந்து வீட்டுக்கு வெளியே வந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## எரிகாயங்களுக்குள்ளான யாழ். பல்கலை மாணவி மரணம்


(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பீட மாணவி ஒருவர் நேற்றுப் பிற்பகல் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

யாழ். புகையிரத வீதியைச் சேர்ந்த தனராஜா துளசிகா (வயது - 23) என்ற மாணவியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## குடிநீர் விநியோகத்திட்டம் செல்வாபுரத்தில் இன்று திறப்பு



செல்வாபுர மக்களுக்கான குடிநீர் விநியோகத்திட்ட திறப்பு விழா இன்று இடம்பெறவுள்ளது.

தைபூசத்திருநாளில் மாலை 3 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

50 வருடங்களுக்கு மேலாக குடிதண்ணீருக்கு அலைந்து திரிந்த செல்வாபுர மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர், பிரதேச சபைத் தலைவர் பொன்னையா வியாகேசு, திருமதி தியாகேஸ்வரி அன்னசிங்கம் ஆகியோரின் முயற்சியால் செல்வாபுர மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதகவும், நன்றி கூறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

## பாராட்டுவிழா

(தும்பளை)

வடமராட்சி வடக்கு பிரதேச கலைஞர்களும், விளையாட்டு வீரர்களும் இணைந்து இலங்கை கலாசார கலை அலுவல்கள் அமைச்சின் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பொ.மகாதேவாவிற்கான பாராட்டு விழா ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தினி மண்டபத்தில் அமரர் இ.பஞ்சலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது.

சி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் இ.தர்மகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் த.ஜெயசீலன் மற்றும் யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விழா நாயகனுக்கான பாராட்டுரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (62)

# பொலிஸ் நிலையம் அமைக்க முல்லை மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கருணாட்டுக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது பிரிவுக்கென ஒரு பொலிஸ் நிலையம் இல்லாமையால் தாம் முறைப்பாடுகள் மற்றும் குற்றச் செயல்களை தெரிவிப்பது குறித்து சிரமங்களை எதிர்நோக் குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவர்கள் பிரிவுகளை உள்ளடக்கியதாக இங்கு பொலிஸ் நிலையம் இல்லாமல் உள்ளது. இதனால் கிராமத்தில் எதாவது குற்றச்செயல்கள், களவு, துஸ்பிரயோக சம்பவங்கள் போன்றன குறித்து தெரிவிக்க முல்லைத்தீவு நகர பொலிஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை கடந்த 28 வருடங்களுக்கு முன்னர் கொக்கிளாய் கிராமத்தில் உப பொலிஸ் நிலையம் ஒன்று இயங்கி வந்த நிலையில் அதுவும் யுத்த அனர்த்தங்களினால் இயங்காமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பதிவுகளுக்கும் குறிப்பாக முறைப்பாடுகளைத் தெரியப்படுத்தி விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிவில் நிர்வாகத்தினரே ஈடுபடுவதாகவும், மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இம்மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை ஏற்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் நிலையில் இப்பிரதேசத்திற்கும் பொலிஸ் நிலையம் ஒன்று இயங்கினால் மக்கள் தமது பிரச்சினைகளை இலகுவாகத் தெரிவிக்க முடியும் எனவும் கூறப்படுகிறது. (04)

## பதிவாளர் சான்றிதழ்கள் ஒரு மணிநேரத்தில் விநியோகம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பிறப்பு இறப்பு சான்றிதழ்களை பெறுவதற்கு தற்போது தினமும் 50 விண்ணப்பங்கள் வரை கைளிக்கப்படுகிறன. இவற்றுக்கான பிரதிகள் குறைந் தது. 1 மணித்தியாலயத்திற்குள் வழங்கப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை கடந்த 2012 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு திருமண சான்றிதழ்களை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு 9325 சான்றிதழ் கள் பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (104)

## நடமாடும் சேவையில் பயன்பெற்ற மக்கள்

(ஆனைக்கோட்டை)


மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று முன்தினம் காக்கைதீவு பொது மண்டபத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பில்ட் தலைமையில் இடம்பெற்றது.

இவ்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை தொடர்பான முறைப்பாடுகள், சாரதி அனுமதிப்பத்திரம் தெடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு உடனுக்குடன் முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்கப்பட்டது.

மேலும் குடும்பப்பிரச்சினைகள், பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் பற்றிய முறைப்பாடுகள், காக்கைதீவிலிருந்து கல்லுண்டாய் செல்லும் கழிவு நீர் ஓடும் வாய்க்கால் சம்பந்தமான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நடமாடும் சேவையின் போது பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு புத்தகப்பைகளும், பெறுமதி மிக்க புத்தகங்களும் வழங்கப்பட்டன . (104)

## யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் 64 ஆவது குடியரசு தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 64 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் நேற்று யாழ்.மருதடி லேனில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்தியத் துணைத்தூதரக ஊழியர்கள், இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் விசா அனுமதி அலுவலக ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வுகளில் முன்னதாக இந்தியத் தேசியக் கொடியை துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் ஏற்றிவைத்ததுடன் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜின் உரையையும் வாசித்தார். அத்துடன் இந்திய அரசாங்கம் வடமாகாணத்தில் மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்களின் முற்னேற்றம் குறித்தும் இந்நிகழ்வில் உரையாற்றினார்.

இதன்போது கடந்த ஒரு வருடகாலத்தில் இந்திய அரசாங்கம் வடபகுதியில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்தின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் வீடுகளை வடபகுதியில் மேற்கொண்டிருந்ததாகவும், இதன் கீழ் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் 11 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் 2013 இற்குள் பளையில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான இரயில்ப்பாதை புனரமைக்கப்பட்டுவிடுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை வடபகுதியில் மக்கள் மீள்குடியேறிய பகுதிகளில் 9500 துவிச்சக்கர வண்டிகளையும், இந்திய அரசாங்கம் அங்குள்ள மக்களுக்கு வழங்கிவைத்திருப்பதாகவும் இந்தப் பகுதிகளில் 79 பாடசாலைகளை புனரமைத்துள்ளதாகவும் காங்கேசன்துறைமுகஅபிவிருத்தி, மீனவர்களுக்கான படகுகள், கிராமிய அபிவிருத்தித்திட்டங்களுக்கு இந்தியன் வங்கி ஊடாக கடன் வழங்கும் திட்டம் போன்றவை கடந்த ஒரு வருடகாலத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இந்தியத் துணைத் தூதுதர் வி.மகாலிங்கம் குடியரசு தினத்தையொட்டி ஆற்றிய உரையில் தெரிவித்தார். (பா)

## மனைவி காணமற்போன நிலையில் வீட்டை உடைத்தெறிந்தார் கணவன்

(வடமராட்சி)

கனடாவிலிருந்து வந்தவர் தனது வீட்டை இடித்ததுடன் காணாமல் போயிருந்த தனது மனைவியின் புடவைகளை எரித்த சம்பவம் ஒன்று நேற்று வடமராட்சி திக்கம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த மேற்படி நபரின் மனைவியான குடும்பப்பெண் 35 பவுண் தங்க நகைகள் மற்றும் 15 இலட்சம் ரூபா பணத்துடன் காணாமற் போயுள்ளதாகக் கணவரால் கடந்த வியாழக்கிழமை' பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த பெண்ணின் கணவர் தொழில் நிமித்தம் கனடாவிற்கு சென்றிருந்தார். இவரின் மனைவியும், 4 வயது பிள்ளையும், திக்கத்தில் வசித்து வந்தனர். அத்துடன் இந்நபரினால் இப்பிரதேசத்தில் 30 இலட்சம் ரூபாவில் காணி வாங்கி வீடு [illegible] அண்மையில் புதுமனைப் புகுவிழாவை மனைவியும், பிள்ளைகளும் கொண்டாடியிருந்தனர்.

இந்நிலையில் கனடாவில் இந்து இலங்கை வந்த கணவரான குறித்த நபர் தனது மனைவி காணமற்போயுள்ளதை அடுத்து தான் கட்டியிருந்த வீட்டின் அரைவாசிப் பகுதியை உடைத்ததுடன் மனைவியின் உடுபுடவைகளையும் எரித்துள்ளார்.

மனைவி இல்லாது இவை எதற்கு என நினைத்தே அவர் இவ்வாறு செய்தாக தெரிவிக்கப்படுகிறது. (116)

## சிவபூமி ஞான ஆச்சிரமம் குப்பிளானில் நாளை திறப்பு

(திருநெல்வேலி)

சிவபூமி ஞான ஆச்சிரமம் குப்பிளானில் திறந்து வைக்கப்படவுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை10.00 மணிக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆச்சிரமத்தை ரிஷி தொண்டுநாத சுவாமிகள் திறந்து வைப்பார்.

வாழ்த்துரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா ஆச்சிரம முதல்வர் சித்ரூபானந்த சுவாமிகள், ஆன்மீகச்சுடர் ரஷி தொண்டுநாத சுவாமிகள், யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலைய சிவப்பாணியாளர் முரளிதரன், கந்தர்மடம் வேதாந்த மடம் சிவத்திரு ஸ்ரீ வேதவித்தியாசாகர், சின்மயா மிஷன் சுவாமி ஜாக்கிரத சைத்தன்ய சுவாமிகள்; சன்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுத சுரபி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு சிவபூமி அறக்கட்டளையினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (137)

# ஆரம்ப பாடசாலை மாணவர்களை வாசிப்புப் பழக்கம் மேம்படுத்தும்

## ஆசிரிய ஆலோசகர் மைதிலி தேவராஜா

(திருநெல்வேலி)

ஆரம்பப்பாடசாலைகளில் சின்னஞ் சிறார்களுக்குக் கல்வி போதிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம்.ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு குணாதிசயம் கொண்டதாக இருக்கும் என யாழ் வலய ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி மைதலி தேவராஜா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் கு.திலீபன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரைநிகழ்த்திய ஆசிரிய ஆலோசகர், எல்லா மட்டங்களிலும் உள்ள மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. வாசிபபு மாணவர்களை மேம்படுத்த வல்லது. வாசிப்பதினால் மனிதன் பூரணமடைகின்றான்.

சில பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பில் அதிகளவிலான பிள்ளைகள் இருப்பார்கள். பல பாடசாலைகளில் குறைந்தளவு பிள்ளைகள் காணப்படுவார்கள். குறைந்தளவு பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டும் போது அவர்கள் மீது அதிக அக்கறை செலுத்தி அவர்களது கல்வியில் அதீத உயர்ச்சியைக் காட்ட முடியும். பெரிய பாடசாலைகளின் தரத்துக்கு சிறிய பாடசாலைகளை உயர்த்த முடியும்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் மீது அதிக அக்கறை செலுத்தல் வேண்டும். பிள்ளைகளை நல்லொழுக்க சீலர்களாக, அறப்பண்புகள் உள்ளவர்களாக கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோருக்கும் உள்ள உயரிய பொறுப்பாகும்.

இவ் வித்தியாலயம் குறுகிய காலத்தில் மிகப் பெரும் முன்னேற்றத்தைக் காண்டுள்ளது. அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், அபிவிருத்திக் குழுவினர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு இங்கே மேலோங்கி இருப்பதைக் காணப் பெருமையாகவுள்ளது எனக்கூறினார்.

இந்நிகழ்வில் யாழ். வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சா.விஜயகுமாரி கலந்துகொண்டதுடன், வித்தியாலய ஆரம்பப்பிரிவுப் பகுதித்தலைவர் சி.ஜெயகாந்தன், ஆசிரியர் எஸ்.மகேந்திரராஜா ஆகியோரும உரையாற்றினர். (137)

# மானிப்பாயில் திருட்டு எவரும் கைதாகவில்லை

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை வீட்டிற்கு பின்புறமாக குளித்துக் கொண்டிருந்த பெண்ணிடம் அவர் அணிந்திருந்த தங்க நகையை திருடன் அபகரித்துச் சென்ற சம்பவமொன்று மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவ நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த தமையைச் சாதகமாகப்பயன்படுத்தி இந்தத்திருட்டு நடைபெற்றுள்ளது.


சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண், பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் நேற்று முன் தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்கள் நிர்வாகத்தின் அங்கீகாரம் பெறவேண்டும்

## வடமாகாண ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டமும் வட மாகாண நிர்வாகத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னர் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி கோரிக்கையினை முன் வைத்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அமுல்படுத்தும் திட்டங்களை கண்காணிக்க தகவல் முகாமைத்துவ முறைமை ஒன்றினை உருவாக்குவது தொடர்பான தொழில்நுட்ப ஆதரவை பெறும் முகமாக யு.என்.ஓ.சி.எச்.ஏ அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில்ஆளுநர் கருத்துதெரிவிக்கும்போது,

ஒவ்வொரு அரசு சாரா நிதி திட்டங்களும் ஒரு தகவல் முகாமைத்துவ முறைமை (MIS) மூலம் கண்காணிக்கப்பட வேண்டும்.

வட மாகாண மக்களிடம் திட்டங்களை செயற்படுத்தும் போது பயனாளிகளின் மீள் வருதலை இத்தகவல் முகாமைத்துவ முறைமை தவிர்க்கும். மேலும் இவ்முறைமையானது மக்களின் உண்மையான தேவைகளை அறிய உதவும்.

இத்தகவல் முகாமைத்துவ முறைமை இணைய உதவியுடன் மாகாணத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு மட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படும்.

இத்தகவல் மேலாண்மை திட்டத்திற்கு மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மூலம் தரவு பதிவேற்றப்படும் என்றார்.

இக்கூட்டத்தில் பிரதிப்பிரதம செயலாளர் (திட்டமிடல்) ஆர்.உமாகாந்தன்; உதவி பணிப்பாளர் (திட்டமிடல) எம்.துஷ்யந்தன், பணிப்பாளர் தகவல் வள முகாமைத்துவம் நிலையம் எஸ்.யோகராஜன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மீறியவர்களுக்கு அபராதம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் பகுதியில் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மீறிய 3 நபர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக ஒலி எழுப்பியபடி வாகனத்தை செலுத்தி சென்ற நபருக்கு ஆயிரத்து 500 ரூபாவும், அளவுக்கு அதிகமான பொருட்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற நபருக்கு 5 ஆயிரம் ரூபாவும்,ஏ-9 சந்தியில் வரி அனுமதிப்பத்திரம் இன்றி தனியார் பேருந்தில் பயணிகளை ஏற்றிச் சென்ற நபருக்கு 5ஆயிரம்ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த நபர்களை பொலிஸார் கைது செய்த நிலையில் இவர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கிளிநொச்சி மாவட்டநீதிமன்ற நீதிபதி இந்நபர்களுக்கு மேற்படி அபராதத்தை செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (கே)

# தினமுரசு ஊடகவியலாளர் பார்த்தீபனுக்கு விருது



பிளவுஸ் ஹாஜியார் பௌன்டேசன் யாழ். மாவட்ட அஹதில்லா சம்மேளனத்துடன் இணைந்து கடந்த வெள்ளிக் கிழமை யாழ். ஒஸ்மொனியாக் கல்லூரியில் நடாத்திய ஹிகிரி 1434 முஹராம் இஸ்லாமிய போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்வின் போது வடமாகாணத்தில் சிறப்பாக சேவையாற்றியமைக்காக தினமுரசு பத்திரிகையின் அலுவலக செய்தியாளர் பாலசிங்கம் பார்த்தீபனுக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# தரணி போற்றிடும் தைப்பூசம் இன்று

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய குமாரன் முருகப் பெருமானுக்குரிய அதிவிசேடமான நாள் தைப்பூசம் இன்றாகும். தரணி போற்றிடும் தைப்பூசம் மிக்க மகிமையும் மகோன்னதமும் மங்களமும் நிறைந்த ஒரு விரதம். இந்த விரதத்தை அனுட்டித்தால் இப்பூவுலகில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழலாம் என்பது நம் முன்னோர் நம்பிக்கை.

துண்டு நாள் முழுவதும் முருகப் பெருமானைத் தியானித்த வண்ணம் கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தசஷ்டி கவசம், திருப்புகழ் முதலானவற்றை ஓதிய வண்ணமும் இருக்க வேண்டும்.

முடியுமாயின் , சிவனடியார் ஒருவருக்கு அன்னதானம் செயயலாம். இன்று விரதமிருப்பவர்கள் இரவு பால், பழம் அருந்தலாம், ஆனால் மாப்பண்டம் எதுவும் உண்ணக்கூடாது.

இத்தைப்பூ நாளிலேயே கல்வியறிவு பெற்றுக்கொள்ள



தேவாரம் பாடிய திரு ஞான சம்பந்தப் பெருமாள் தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய் என்று குறிப்பிட்டுள்ளமையிலிருந்து இதன் அருமை பெருமை தெற்றெனப்புலப்படுகிறது.

இத்தனை சிறப்பு வாய்ந்த இந்தத் தைப்பூச விரதம் அனுட்டிக்க விரும்புவோர் காலை எழுந்து புனித புண்ணிய நீராடி சநதியாவந்தனம் முடித்து ஆலய தரிசனம் செய்தல் வேண்டும்.

இன்று மதியம் ஒரு பொழுது ஆயத்தமாகும் ஏடுதொடக்குதல் எனும் வித்தியாரம்பமும் செய்யப்படுகிறது.அத்துடன் பெண் குழந்தைகளுக்குக் கர்ணவேதனம் என்கின்ற காது குத்துதல் நிகழ்வும் இன்று தான் நிகழ்த்தப்படும். மேலும் வயலில் விளைந்த நெல்மணி களை அறுவடை செய்து புதிரெடுக்கும் மங்களகரமான நிகழ்வும் இன்றைய தைப்பூச நன்னாளிலேயே நிகழ்த்தப்படுகின்றது. புதிதாக வியாபாரம் செய்யத் தொடங்கிப் புதுக்கணக்கு எழுதும் பணியும் இன்று தான் ஆரம்பிக்கப்படுகின்றது. இவ்வாறு பல விடயங்களுக்கு இத்தைப்பூசமே கால்கோளாகும். இவ்வாறு பல நிகழ்வுகளுக்கு நிலைக்களமாகும் இததைப்பூச நன்னாளில் சைவ மக்களாகிய நாங்களும் விரதங்காத்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வதோடு வாழ் நாளில் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று நலமுடன் வாழ்வதற்கு நம்மை நாமே தயார் படுத்திக்கொள்வோமாக.

*சிவநெறிக்கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி!

மார்ச் மாதம் வரும் அடுத்த ஜெனீவா திருவிழாவுக்கான அடுக்குகளை கூட்டமைப்புத் தலைவர்களும் அவர்களது ஊடகங்களும் எடுக்கத் தொடங்கிவிட்டன. கூட்டமைப்பினர் ஆபிரிக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அதற்கான அலுவல்களைப் பார்க்கப்போவதாகச் சொல்லப்படுகிறது.

இடையிலே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஜெனீவா காய்நகர்த்தலுக்காக புதுடெல்லியில் இறக்கிவிடப்பட்டிருப்பதாக, ஏதோ அபிமன்யுவுக்கு கர்ணனாதியோர் உருவாக்கிய வியூகம்போல, பெரும் பெரும் அலுவல்கள் நடந்துகொண்டிருப்பது மாதிரி தமிழ்மக்களுக்கு வழக்கமான 'திறில் படங்கள்' காட்டப்படுகின்றன.

ஆபிரிக்க அமெரிக்க சுற்றுப்பயணம் போகிறவர்களும் சரி, புதுடெல்லியில் காய் நகர்த்துவதாகச் சொல்லப்படுகிற சந்திரிகாவும் சரி, அங்கெல்லாம் எதை நகர்த்தி, தமிழ்மக்களுக்கு எதை எடுத்துத் தரப்போகிறார்கள் என்பது பற்றி இந்த ஊடகங்களோ தலைவர்களோ எதுவும் சொல்கிறார்களில்லை. இந்த அகிம்சாவாதிகள் எதற்காக இதுக்குப்போய் இராணுவ ரகசியம் பேணுகிறார்களென்றும் தெரியவில்லை.

இவர்கள் தேர்தல் காலங்களில் முழங்கியதை வைத்து நாம்தான் ஒரு ஊகத்துக்கு வரவேண்டியிருக்கிறது. அதாவது, அமெரிக்காவினூடாக ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு இறுக்கமான அழுத்தங்களைப் பிரயோகித்து, கொஞ்ச நாட்களுக்கு அரசின் திக்குமுக்காடல்களைப் பார்த்து ரசிக்கும் சந்தோஷத்திற்கே இம்முறையும் இவர்கள் அடுக்கெடுப்பதாகத் தெரிகிறது.

இலங்கை அரசை ஜெனீவா மாநாடு நடந்து முடியும்வரை பரபரப்பில் வைத்திருக்கலாமே தவிர, அமெரிக்காவின் பொருளாதார நலனுக்கோ அல்லது இந்தியாவின் நலனுக்கோ அது மெல்லத் தலையசைத்து விட்டால் இந்த நெருக்கடியிலிருந்தும் இலங்கை அரசு இலகுவாக வெளிவந்துவிடும் என்பது அரசியலறியாக் குழந்தைப் பிள்ளைக்கும் இன்று தெரிந்த சங்கதியே.

இந்தத் தலைவர்களுக்கும் ஊடகங்களுக்கும் தேவைப்படுவது இந்த இரண்டு மாதப் பரபரப்பே. ஒரு சாராருக்கு மக்களை விறுவிறுப்புக்குள்ளாக்கி தங்கள் அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் தேவை. மறு சாராருக்கு மக்களுக்குப் பரபரப்பூட்டி அதனால் நடக்கும் தங்களது வியாபாரத் தேவை. இதற்கு முந்திய மாநாடுகளின் போதும் இதுதான் நடந்ததே தவிர, தமிழ்மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு எந்த அறிகுறியும் மேலெழும்பவில்லை என்பது யாவருக்கும் தெரிந்ததே.

இவர்கள் சர்வதேசம் வருமென்று அறுதியிட்டுச் சொல்லி மூன்று தேர்தல்களும் முடிந்துவிட்டன; நிறைய சர்வதேச மாநாடுகளும் முடிந்துவிட்டன. இவர்களோ இன்றைக்கும் சளைக்காமல், தேர்தலுக்குத் தேர்தல் சர்வதேச மாநாட்டுக்கு மாநாடு அதே பரபரப்புகளையே காட்டிவருகிறார்கள். "தானாய் விடிவெள்ளி தோன்றுகின்ற சங்கதிகள் வானத்தில் மட்டும்தான். வாழ்வில் இருள் தொடரும்" என்ற ஜெயபாலன் கவிதையைப் போல மக்களும் ஒரு வித விரக்தியோடு இந்தக் கூத்துகளுக்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

அமெரிக்காவோ ஏனைய சர்வதேசமோ இலங்கையின் மனித உரிமை தொடர்பான விடயங்களில் கரிசனை காட்டுவதும், ஜெனீவாவில் பிரேரணையைக் கொண்டுவருவதும் தமிழர் பிரச்சினையைக் கருத்தில் கொண்டே என்று யாராவது ரீல் விடுவார்களாக இருந்தால், அவர்களுக்கு, அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் ஜோன் கெரியின் இலங்கை குறித்ததான சமீபத்திய அறிக்கையைப் பார்க்கச்சொல்லிப் பரிந்துரைக்கலாம்.

அமெரிக்காவின் மூலோபாய ஆர்வங்களுக்கான முதலீட்டை வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை மட்டும் கருத்தில்கொண்டு மேற்கொள்வதற்கு பதிலாக, சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும் செய்யப்பட வேண்டும் என்று அது குறிப்பிடுகிறது. இலங்கை அரசிடமிருந்தான அவர்களது எதிர்பார்ப்பு என்ன என்பதைப் புரிந்துகொள்ளாதது போலவே நடித்துக்கொண்டு, அமெரிக்கா வரும் சர்வதேசம் வரும் என்று கதைவிட்டுக்கொண்டே காலந்தள்ளுவோரின் ஏமாற்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

- ஆசிரியர்

# இலங்கைப் படைகளுக்கு அமெரிக்காவில் பயிற்சி

## சர்ச்சைக்கு இன்னும் தீர்வு இல்லை

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே, இலங்கையின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கான உயர் கட்டளைப் பயிற்சிநெறி வாய்ப்புகளை அமெரிக்கா மறுத்துள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

லெஹி சட்டத்தின் படியே, இலங்கையின் மூத்த இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி வாய்ப்பு மறுக்கப்பட்டது என்பதை அரசாங்கம் அறிந்து கொண்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சட்டம், மனிதஉரிமைகளை மீறிய வெளிநாட்டு இராணுவங்களுக்கான அமெரிக்காவின் இராணுவ உதவிகளைத் தடைசெய்கிறது.

இந்தச் சட்டத்துக்கு மூல காரணமாக இருந்த வேர்மொன்ட் செனெட்டர் பற்றிக் லெஹியின் பெயரிலேயே இது அழைக்கப்படுகிறது.

இந்தச் சட்டம். இலங்கை இராணுவத்தினருக்கான உதவிகளைத் தடைசெய்வதற்கான சட்டக் கருவியாக பயன்படுத்தப்பட முடியும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களின் பெயர்களை மட்டுமே பயிற்சிக்காக தருமாறும் அரசாங்கம் கேட்டுக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

# தேசிய கீதத்தில் தமிழ்மொழியா? வேண்டாமென்கிறார் ராமன்ய பீடாதிபதி

தேசிய கீதத்தில் தமிழ்மொழியையும் உள்ளடக்கினால் பிரச்சினை உருவாகும் என்று ராமன்ய பீடத்தின் பிரதம சங்கநாயக்க வண. நபன பிறேமசிறி நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

மடவளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே இலங்கை ராமன்ய பீடத்தின் பிரதம சங்கநாயக்கரான வண. நபன பிறேமசிறி நாயக்க தேரர்,

இலங்கையின் தேசிய கீதத்தினுள் தமிழ்மொழியும் சேர்க்கப்பட்டால், நாட்டில் மேலும் பல பிரச்சினைகள் தோன்றும்.

எல்லா இனத்தவர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலேயே, இந்த தேசியகீதம் 1940 களில் இயற்றப்பட்டது.

நாட்டில் உள்ள எல்லா இன மக்களிடையேயும் இது சகோதர உணர்வை ஏற்படுத்துகிறது.

இந்த தேசிய கீதத்தை எல்லா இனமக்களும் மதிக்கின்றனர். இதனை மாற்றும் அரசியல்வாதிகளின் முயற்சி அதிர்ச்சி அளிக்கிறது. இது இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சி எனத் தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, இலங்கையின் தேசிய கீதத்தில் தமிழ் மொழியும் உள்ளடக்கும் யோசனை ஒன்றை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேருந்துகளில் பிச்சையெடுக்க பெப்ரவரி ஒன்று முதல் தடை

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தனியார் பஸ்களில் பிச்சை எடுத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபடுவதை தடைசெய்வதற்கு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக ஏற்படுகின்ற இடையூறுகளை கவனத்திற் கொண்டு இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பஸ்களில் பிச்சை எடுத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். பல்வேறு தரப்பினர் பஸ்களில் பயணிகளிடம் பணம் அறவிடுகின்றமை பஸ்களில் பிரசாரங்களில் ஈடுபடுதல் ஆகிய நடவடிக்கைளுக்கும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் தடை விதிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மத அடக்குமுறைக்கு எதிராகப் போராட முஸ்லிம் தலைமைகள் தயங்குவது ஏன்?

## மனம் குமுறுகிறார் மாநகர உறுப்பினர்

பௌத்த கடும்போக்குவாதிகளினால் இஸ்லாத்திற்கு எதிராக தலைவிரித்தாடும் மத அடக்குமுறையை தடுத்து நிறுத்த முஸ்லிம் தலைமைகள் ஏன் தயங்குகின்றன என மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் என்.கே.றம்ழான் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

அண்மைக்காலமாக நாட்டில் நலாபுறங்களிலும் புனித இஸ்லாத்திற்கும் அதனைப் பின்பற்றும் முஸ்லிம் சமூகத்திற்கும் எதிரான பௌத்த தீவிரவாதம் மிக மோசமாக தலைதூக்கியுள்ளது.

அனுராதபுரம் சியாரம் உடைப்புடன் சில பௌத்த காவியுடை காடையர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட புனித இஸ்லாத்திற்கு எதிரான அடக்குமுறை இன்று பள்ளிவாசல்கள் உடைப்பு, பாங்கு சொல்வதற்குத் தடை, தொழுகைக்குத் தடை, முஸ்லிம் கிராமங்களிலிருந்து வெளியேற்றுதல், வியாபார நிலையங்களுக்கு சீல்வைத்தல், ஹலால் சான்றுதல்களை தடை செய்தல் என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்வதுடன் அதற்கு எதிரான போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் தினம் தினம் படிப்படியாக அதிகரித்து வருகின்றன.


இவ்வாறு முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான திட்டமிட்ட போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் எந்தவொரு அரசின் ஆட்சிக் காலத்திலும் இடம் பெறவில்லை. கடந்த ஆட்சிக் காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கத்தில் குறைந்த எண்ணிக்கையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்து முஸ்லிம்களினதும் புனித இஸ்லாத்தினதும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்து வந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் மூலை முடுக்குகளெல்லாம் மேடை போட்டு மேடைக்கு மேடை உரிமைகளை வென்றுதருவோம் என்று வீர முழக்கமிடும் கட்சிக்கார்களாகவும், உரிமைகளோடு அபிவிருத்தியையும் பெற்றுத்தருவோம் என்று வரிந்து கட்டிக் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் வரலாறு கூறுவோர்களாகவும், ஆளும் கட்சியோடு சேர்ந்து இருந்தால் தான் எதையும் சாதிக்க முடியும் என தனித்துவத்தை தாறுமாறாக விமர்சனம் செய்பவர்களாகவும் தேர்தல் காலத்தில் முஸ்லிம்களை பரஸ்பரம் ஏமாற்றி வாக்குகளை பெற்றுக் கொண்டு அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுக்கும் நீங்கள் முஸ்லிம் சமூகம் பற்றியோ அல்லது படிப்படியாக பறிக்கப்பட்டு வரும் உரிமைகளைப் பற்றியோ சிந்திக்காமல் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு வழங்கி தங்களது அமைச்சுப் பதவிகளை காப்பாற்றிக் கொள்கின்றவர்களாக இன்று முஸ்லிம் அரசியலை மாற்றியமைத்து விட்டீர்கள்.

பதவிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம் சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்கோ அல்லது அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கோ முதுகெலும்பு இல்லாத முஸ்லிம் தலைமைகளாக நீங்கள் இருப்பீர்களானால் நாளை இறைவனின் சன்னிதானத்தில் குற்றவாளிகளாக முழு சமூகத்திற்கும் அநீதி இழைத்தவர்களாக எழுப்பப்படுவீர்கள்.

இன்று வரைக்கும் நீங்கள் பௌத்த கடும்போக்காளர்களினால் இஸ்லாத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட மத அடக்குமுறைக்கு எதிராக நீங்கள் மேற்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைதான் என்ன? ஜனாதிபதியுடன் பேசினோம் குழு அமைத்தோம் என்று கூறலாம் அது வெறும் கண்துடைப்பு.

இந்த நாட்டில் எங்கோ ஒரு மூலையில் சிறியதொரு அசம்பாவிதம் ஏற்பட்டாலும் அதனை உடனடியாக தகவல் அறிந்து கொள்ளும் வல்லமையுள்ள பாதுகாப்பு திறமையை கொண்டவர்களால் பகிரங்கமாக இஸ்லாத்திற்கு எதிராக போராட்டம் நடாத்துகின்றவர்களுக்கு பின்னால் யார் இருக்கின்றனர் என்று குழு அமைத்து கண்டு பிடிப்பதென்பது வேடிக்கையானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# புலுடா அரசியலின் முடிவிலேயே தமிழ் மக்களுக்கு விமோசனம்

■ சங்கர சிவன்

இனப்பிரச்சினை விடயத்தில் புதிய திருப்பமொன்று விரைவில் ஏற்படப்போகின்றது என்கிறார் சம்பந்தன். இந்தியாவில் கண் சத்திரசிகிச்சை முடிந்து இலங்கைக்குத் திரும்பியதும் அவர் விடுத்த முதலாவது செய்தி இது. இப்படியான அறிவிப்புகளை அடிக்கடி விடுப்பதில் சம்பந்தர் கைதேர்ந்தவர். ஆனால், அவர் சொன்னது எதுவுமே இது வரை நடக்கவில்லை. அடிக்கடி இப்படியான அறிவிப்புகளை விடுத்துத் தமிழ் மக்களைப் பேய்க்காட்டும் வழக்கம் சம்பந்தருக்கு மாத்திரம் என்றில்லை. தமிழ் அரசியல் வரலாற்றில் இப்படியான அறிவிப்புகள் அடிக்கடி விடுக்கப்பட்டிருக்கின்றன.

எந்தக் கட்சி ஆட்சி அமைப்பது என்பதை இனிமேல் நாங்கள்தான் தீர்மானிப்போம் என்று அறுபதுகளில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். அந்தக் காலத்தில் ஆட்சி அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடியதால் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு இப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டது. இவர்களின் அறிவிப்புக்குப் பின் எத்தனையோ அரசாங்கங்கள் இவர்களுடைய ஆதரவு இல்லாமலே அமைந்தன.

வட்டுக்கோட்டையில் தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றிய பின் வந்த முதலாவது அறிவிப்பு 'அடுத்த தீபாவளி தமிழீழத்தில்' என்றிருந்தது. அது நடக்கவில்லை. பின்னர் சொன்னார்கள். அடுத்த தைப்பொங்கலன்று தமிழீழக் கொடியை ஏற்றுவோம் என்று. அதுவும் நடக்கவில்லை.

சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து செயற்பட்ட காலத்தில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் மூலம் தீர்வு காண்போம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறினார்கள். தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது. ஆனால், தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையும் தீரவில்லை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது சம்பந்தன் தாராளமாக அறிவிப்புகளைச் செய்தார். அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்குச் சர்வதேச சமூகம் தயாராக இருக்கின்றது என்றும், மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் வந்து இறங்கும் என்றும் சம்பந்தன் கூறியது போல எதுவும் நடக்கவில்லை. இப்போது சொல்கிறார் புதிய திருப்பம் ஏற்படப்போகின்றது என்று. இந்தத் திருப்பம் என்ன என்பது மூடுமந்திரம். சம்பந்தனைத் தவிர வேறு' எவருக்கும் தெரியாது. சில வாரங்கள் கழிந்த பின் இன்னொரு திருப்பத்தைப் பற்றிச் சொன்னாலும் சொல்லலாம்.

இந்த அறிவிப்புகள் எல்லாம் வெறும் அரசியல் தந்திரங்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியவில்லை. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தெளிவான தீர்வு தமிழ்த் தலைவர்களிடம் இல்லை. இதை மக்கள் புரிந்து கொள்ளும்போது தங்களை விட்டு விலகிச் சென்றுவிடுவார்கள் என்பதற்காக இடைக்கிடை இப்படியான அறிவிப்புகளைச் செய்து மக்களை 'கட்டிப்போடும்' தந்திரோபாயமே இது. ஆவேசப் பேச்சுக்கள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் மக்களை உணர்ச்சிவச நிலையில் தொடர்ச்சியாக வைத்திருப்பதும் இன்னொரு தந்திரம். சொந்தமாகச் சரக்கு இல்லாததே இதற்கெல்லாம் காரணம். அதாவது பிரச்சினையின் தீர்வு பற்றிய தெளிவான நிலைப்பாடு இல்லாமல் அடிக்கடி இப்படியான அறி விப்புகளைச் செய்வதன் மூலமும் வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்வதன் மூலமும் போலியான நம்பிக்கையை மக்களிடம் வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டு வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தென்னாபிரிக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் போய் வரப்போகின்றார்கள். இவர்களுக்கு இது ஒரு சுற்றுலா. இந்தச் சுற்றுலா முடிந்து திரும்பியதும் சர்வதேச சமூகம் தயார் நிலையில் நிற்கின்றது என்றும் எந்த நேரமும் இலங்கை அரசாங்கத்தை இறுக்கி அரசியல் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்றும் ஒரு அறிவிப்பைச் செய்வார்கள். அதைக் கேட்டு மக்களும் கற்பனைகளை வளர்த்துக்கொள்வார்கள்.

தீர்வைக் கொண்டு வருவதற்குச் சர்வதேச சமூகம் தயாராக இருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது கூறியதும் விரைவில் புதிய திருப்பம் வரப் போகின்றது என்று இப்போது கூறுவதும் உண்மையான அறிவிப்புகளென்றால் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தென்னாபிரிக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் போக வேண்டிய தேவை என்ன? தீர்வுக்கான அறிகுறிகள் இல்லாத நிலையில் தானே ஆதரவு திரட்டுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்.

கூட்டமைப்புத் தலைவர்களின் செயற்பாடுகள் எல்லாம் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றுவதாகவே இருக்கின்றன. எந்தவித அடிப்படையும் இல்லாத அறிவிப்புகளை அடிக்கடி வெளியிடுவார்கள். இந்த அறிவிப்புகள் உண்மையானவை என்று நம்பும் மக்கள் இதோ தீர்வு வருகின்றது என்று நம்பி ஏமாற்றமடைவதுதான் மிச்சம். தமிழ் ஊடகங்களில் பெரிதாக விளம்பரப்படுத்தி வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வார்கள். நாடு திரும்பியதும் பேச்சுவார்த்தை பூரண வெற்றி என்றும் விரைவில் தீர்வு வரும் என்றும் அறிவிப்பார்கள். மக்கள் அதையும் நம்பி ஏமாற்றம் அடைவர்.

தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதன் அடிப்படையில் அரசியல் வியூகத்தை வகுத்துச் செயற்படாமல் காலத்துக்குக் காலம் பொய்யான அறிவிப்புகளை விடுப்பதன் மூலமும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதன் மூலமும் மக்களிடம் போலியான நம்பிக்கையை வளர்ப்பது தொடருமேயானால் அடுத்துவரும் சந்ததிகளும் பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே வாழ நேரிடும். இனப்பிரச்சினை தீராமலிருப்பது தலைவர்களை வாழவைக்கும்.

இனப்பிரச்சினை பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் பேசிப் பேசியே தலைவர்கள் தங்கள் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வார்கள். ஆனால்,மக்களுக்கு மாறாத்துன்பம். இனப்பிரச்சினைக்கு மத்தியில் வாழ்வது ஒருபுறமிருக்க, பிரச்சினை தீராமலிருப்பதன்விளைவாகத் தலைதூக்கும் உடனடிப் பிரச்சினை களுக்கு முகங்கொடுக்கும் அவலத்துக்கும் மக்கள் தான் உட்படுவார்கள். தலைவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. தமிழ் மக்களின் சிந்தனை சரியான பாதையில் திரும்புவதைத் தடுப்பதற்காகத் தலைவர்கள் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்வார்கள். இளைஞர்களையும், மாணவர்களையும் உசுப்பிவிட்டு அவர்கள் கைது செய்யப்படும் நிலையை உருவாக்குவார்கள். பின்னர் அந்தக் கைதுகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவார்கள். ஆனால், கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள்.

**தென்னாபிரிக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் போய் வரப்போகின்றார்கள். இவர்களுக்கு இது ஒரு சுற்றுலா. இந்தச் சுற்றுலா முடிந்து திரும்பியதும் சர்வதேச சமூகம் தயார் நிலையில் நிற்கின்றது என்றும் எந்த நேரமும் இலங்கை அரசாங்கத்தை இறுக்கி அரசியல் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்றும் ஒரு அறிவிப்பைச் செய்வார்கள். அதைக் கேட்டு மக்களும் கற்பனைகளை வளர்த்துக்கொள்வார்கள்.**

கூட்டமைப்புத் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்படும் ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்றுபவர்களும் இத்தலைவர்களால் உசுப்பிவிடப்பட்டுக் கைது செய்யப்படுபவர்களும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இங்கே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களும் மாணவர்களுமே. ஆனால், தலைவர்களின் வாரிசுகள் வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு உயர்கல்வியைத் தொடர்வார்கள். தலைவர்களின் இந்தப் புலுடா அரசியல் முடிவுக்கு வருவதிலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பது பற்றிய முடிவு இல்லாமல் அரசியல் தீர்வுக்காகப் போராடுகின்றோம் என்று சொல்வதெல்லாம் வெறும் பம்மாத்து. தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதன் அடிப்படையில் நடத்தும் போராட்டம்தான் பலன் தரக்கூடியது. அப்போதுதான் சர்வதேச சமூகத்தின் ஆதரவு மாத்திரமன்றி இலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகளின் ஆதரவும் தமிழ்மக்களின் அரசியல் தீர்வுப் போராட்டத்துக்குக் கிடைக்கும். இந்த யதார்த்தத்தைத் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளும் போது தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் ஏமாற்று அரசியல் அவர்களுக்குப் புரியும். ●

**தமிழ் மக்களின் சிந்தனை சரியான பாதையில் திரும்புவதைத் தடுப்பதற்காகத் தலைவர்கள் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்வார்கள். இளைஞர்களையும், மாணவர்களையும் உசுப்பி விட்டு அவர்கள் கைது செய்யப்படும் நிலையை உருவாக்குவார்கள். பின்னர் அந்தக் கைதுகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவார்கள். ஆனால், கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள்.**

# ஊஞ்சல் ஆடிய சிறுவன் கழுத்து நெரிபட்டு மரணம்

(கொழும்பு)

தாயின் சேலையில் ஊஞ்சல் கட்டி விளையாடிக் கொண்டிருந்த 8 வயது சிறுவன் அந்த சேலையில் கழுத்து நெரிபட்டு உயிரிழந்துள்ளான். நிவித்திகல பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சிறுவன் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அன்றையதினம் பாடசாலைக்குச் செல்லவில்லை.

சிறுவனின் தாயும் தந்தையும் தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்காக சென்றிருந்த நிலையில் வீட்டில் தனியாக விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

முற்பகல் 11 மணியளவில் சிறுவனின் தாயார் வீட்டிற்கு வந்து பார்த்த போது, சிறுவன் கழுத்தில் சேலை சுற்றப்பட்ட நிலையில் உயிரிழந்து காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சிறுவன் வழமையாக சேலையில் ஊஞ்சல் கட்டி விளையாடுவதாகவும், தான் பல முறை எச்சரித்ததாகவும் சிறுவனின் தாயார் குறிப்பிட்டுள்ளார். சிறுவனின் கழுத்தை சேலை இறுக்கியமையின் காரணமாகவே இவ் உயிரிழப்பு நேர்ந்துள்ளதாக மரண பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வன்னியில் மக்கள் காணாமல் போனது அனைவருக்கும் தெரிந்த உண்மை



(கொழும்பு)

வன்னியில் இறுதிக்கட்டப் போரின்போது ஏராளமான தமிழர்கள் காணாமல் போனது உண்மையே. இதனை யாரும் மறுக்க இயலாது. எனவே வன்னியில் காணாமல் போன தமிழ்மக்களின் நிலை கண்டறியப்பட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் காணாமல் போனவர்களின் உறவுகள் சாட்சியமளித்துள்ளனர். இதனை இராணுவத் தரப்பினர் மறுக்கின்றமை முழுப்பூசினிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்ற செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் வாசுதேவ தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும். ஏனென்றால் உள்நாட்டு யுத்தமும் அதன் பின்னரான செயற்பாடுகளும் முக்கியமானவை.

அத்துடன் அவ்வறிக்கையில் மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்க்க பலவேறு வழிமுறைகளை நல்லிணக்க ஆணைக குழு பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக காணாமல் போனவர்களின் விபரங்கள், உறவினர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பதிவாகியுள்ளது.

இதில் யார் கூட்டிச் சென்றது? எப்போது சம்பவம் இடம்பெற்றது போன்ற விடயங்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே இதனை பொய் எனக் கூறக்கூடாது. நியாயமான சாட்சியங்களின் அடிப்படையில் உண்மைகளை அரசாங்கம் கண்டறிய வேண்டும்.

இல்லையென்றால் மீண்டும் பிரச்சினைகள் மேலோங்கி நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என அமைச்சர் கூறினார்.

# பெண்கள் வெளிநாடு செல்வதை தடைபோட்டு நிறுத்த முடியாது



(கொழும்பு)

பெண்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதனை தடுக்க முடியாது என அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனினும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செலலும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும். வேலை வாய்ப்புகளுக்காக பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது தொடர்பான சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக செல்லும் பெண்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பு அளித்து வருகின்றனர்.

வெளிநாடு செல்வதற்கு முன்னதாக பணிப்பெண்களுக்கு விசேட பயிற்சிகளை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

# கட்சியின் விதிகளை எவரும் மீறவேண்டாம்

## ரணில் கோரிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை மட்டுமே முன்னெடுக்கவேண்டும்.

அதற்கு அப்பால் சென்று தனிப்பட்ட ரீதியிலான வேலைகளைச் செய்யமுடியாது என்று அக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

அவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக கைவிடுமாறு விசேட கட்டளையொன்றை விடுத்துள்ளார். கட்சியின் யாப்பின் பிரகாரம் கட்சித் தலைமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் செயற்பாடுகளை கட்சியின் பொதுச் செயலாளர் தெளிவுப்படுத்துவார். அதற்கு அப்பால் சென்று பொதுவேலைகளை செய்ய வேண்டுமாயின் கட்சி அங்கத்தவர் மற்றும் அமைப்பாளர் பதவிகளில் இருந்து விலகி பொதுவேலைகளை முன்னெடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கீதத்தில் கைவைக்க முடியாது ராமன்ய நிக்காய பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய கீதத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என ராமன்ய நிக்காயவின் பீடாதிபதி நாபன பத்மசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்திற்கு தமிழ் மொழியை சேர்ப்பதனால் இல்லாத பிரச்சினைகள் உருவாகும்.

40 ஆம் ஆண்டில் தேசிய கீதம் உருவாக்கப்பட்டது, அனைத்து இனங்களையும் உள்ளடக்கும் வகையிலேயே தேசிய கீதம் உருவாக்கப்பட்டது. தற்போதைய தேசிய கீதம் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில், அமைந்துள்ளது.

தேசிய கீதத்திற்கு அனைதது மக்களும் கௌரவமளிக்கின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளே இந்தப் பிரச்சினையை தூண்டி விடுவதாக நாபன பத்மசிறி தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# தாதியின் மரணத்தில் சந்தேகம்; மீள் விசாரணைக்கு உத்தரவு



(கொழும்பு)

தற்கொலை செய்து கொண்டதாக தீர்மானிக்கப்பட்டு தெல்தெனிய பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட தமிழ்தாதி ஒருவரின் சடலம் தெல்தெனிய நீதவானின் உத்தரவின் பேரில் மீண்டும் எதிர்வரும் 28 ஆம் திகதி தோண்டி எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றி வந்த 31 வயதுடைய மலர் என்பவர் கடந்த டிசம்பர் மாதம் தெல்தெனியவிலுள்ள தம் கணவரின் வீட்டில் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

இவரது திடீர் மரண விசாரணையில் சாட்சியங்கள் வைத்திய அறிக்கை என்பவற்றின் அடிப்படையில் தற்கொலை மரணம் என தீர்மானிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. இந்நிலையில் இறந்தவரின் சகோதரர் ஒருவர் இம் மரணத்தில் தமக்கு சந்தேகம் உள்ளதாக தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்தே நீதவான் எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் தோண்டி எடுத்து மீள் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

தற்போது இச் சடலம் அடக்கம் செய்யப்பட்ட மயானத்தில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# மனிதாபிமான நடவடிக்கைகளை மட்டுப்படுத்துகிறது சுவிஸ் அரசு

## இலங்கையர்களுக்கு ஏமாற்றம்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையிலான விசாக்களை இரத்துச் செய்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சில அரசியல்வாதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பரிந்துரைகளுக்கு அமைய சுவிட்சர்லாந்துக்கு தப்பிச் செல்ல சிலர் முயற்சித்து வருகின்றனர்.

சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் காரணமாக இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்து சிலர், போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்து பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு அகதி அந்தஸ்து கோருவோர் பற்றிய தகவல்கள் சுவிட்சர்லாந்து அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இதன் காரணமாகவே மனிதாபிமான அடிப்படையில் விசா வழங்கும் நடைமுறையை சுவிட்சர்லாந்து அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

கடந்த காலங்களில் கருவாட்டுக்கடை முதலாளிமாரும் சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்து பெற்றுக்கொணடுள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# ஆஸி.எதிர்க்கட்சி பிரமுகர் விரைவில் கொழும்புக்கு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் எதிர்க்கட்சி பிரதித் தலைவர் ஜூலி பிஷப் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். கொழும்பு வரும் இவர் இலங்கையில் இடம்பெறும் கடத்தல் சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி பிரதித் தலைவருடன் அவுஸ்ரேலிய எல்லை பாதுகாப்பு பேச்சாளர் மைக்கல் கீனனும் இலங்கை வரவுள்ளார்.

அவுஸ்ரேலிய லிபிரர் கட்சியின் பேச்சாளர் பிஷப், இலஙகையில் தமிழ் பிரதேசங்களிற்கான விஜயத்தை மேற்கொண்டு அவர்களுடன் பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

குறிப்பாக இவர் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு தமிழ்த் தலைவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

# புலிகளை அழிக்க அமெரிக்க ஆதரவு தொடர்ச்சியாக எமக்கு கிடைத்தது



(கொழும்பு)

புலிகளை அழிப்பதற்கு அமெரிக்காவும் எமக்கு பூரண ஆதரவு வழங்கியதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்குமாறு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஜ் தம்மிடம் தனிப்பட்ட ரீதியில் ஊக்கமளித்ததாக இலங்கையின் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விக்கிலீக்ஸில் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் இலங்கைக்கான முன்னாள் தூதர் பெற்றீசியா பியூட்டினியஸ் இலங்கையில் பதவியேற்ற பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதியுடன் தனிப்பட்ட சந்திப்பை நடத்தினார்.

அதேநேரம் தற்போது இடம் பெயர்ந்தோர் விடயத்தில் அந்த நாடு தம்மை விமர்சிக்கிறது என்று குறிப்பிட்டார். போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாக கூறி அமெரிக்கா தமக்கு மற்றும் நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதையும் மகிந்த ராஜபக்ஷ, பெற்றீசியாவிடம் முறைப்பாடாக தெரிவித்துள்ளார். இதனை பெற்றீசியா, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலி கால்நடைபண்ணையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்



(அச்சுவேலி)

அச்சுவேலியில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து அதனை விரிவாக்கம் செய்வது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிராந்திய கால்நடைப் பண்ணைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், பண்ணையின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தினார்.

அங்கு கோழிக் குஞ்சுகளை விநியோகம் செய்தல், முட்டைக் கோழிகளை வளர்த்து அதனூடாக பயன்களைப் பெற்றுக் கொள்வது, கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுவது, பண்ணையின் அபிவிருத்தி மேம்பாடு தொடர்பிலுள்ள இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர் அவதானம் செலுத்தினார்.

குறிப்பாக பண்ணைப் பகுதியில் உள்ள தாழ்நிலப்பகுதியை மண்ணிட்டு நிரப்பி அப்பகுதியில் பயிர் உற்பத்திகளை மேற்கொள்ளுவது, மற்றும் பட்டதாரிப் பயிலுனர்களை உள்வாங்கி அவர்கள் ஊடாக திட்டங்களை முன்னெடுப்பது, மாகாண கால்நடை அமைச்சின் ஊடாகவும், ஏனைய துறைசார்ந்தோர் ஊடாகவும் பண்ணையின் செயற்திட்டங்களை விரிவாக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழிற்பேட்டைக்கான இணைப்புச் செயலகத்தையும் பார்வையிட்டார். இந்திய அரசின் நிதியுதவியுடன் அப்பகுதியில் அமையப்பெறவுள்ள கைத்தொழிற்பேட்டை குறித்தும் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் அப்பகுதியில் கைத்தொழிற்பேட்டையைச் சூழவுள்ள பகுதியில் எல்லையை நிர்ணயித்து சுற்றுவேலிகள் அமைப்பது மற்றும் வீதிகளை செப்பனிடுவது தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார். இதன் போது வலிகிழக்கு பிரதேச செயலர் பிரதீபன், கைத்தொழில் அபிவிருத்தி சபை பணிப்பாளர் கெங்காதரன், ஈ.பி.டி.பியின் கோப்பாய்பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச இணைப்பாளர் தர்மராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# உபகரணங்கள் கையளிப்பு

(பருத்தித்துறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வடமராட்சி வடக்கில் உள்ள அங்கத்துவ கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட ஆணையாளர், யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் யோகராஜா, பருத்தித்துறை இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆலோசகர் பா.ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பல இலட்ச ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கழகங்களுக்கு வழங்கப்பட்டன. (109)

# அதிபர் நியமனம்

(கிளிநொச்சி)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் புதிய அதிபராக சி.சிவானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் சேவைப் பரீட்சையில் அண்மையில் சித்தியடைந்த இவர் தனது முதல் நியமனமாக இங்கு கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இப் பாடசாலையில் முன்னர் அதிபராகக் கடமையாற்றிய திருமதி லலிதாமலர் முகுந்தன் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

இதனை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையின் அதிபராக நடராசா ஜெயரூபன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (90)

# யாழிலுள்ள தொழிற்சாலைகள் பதிவுசெய்யப்பட வேண்டும்

## கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தொழில் திணைக்கழகத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவில் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும் என தொழிற்சாலை பரிசோதனை பொறியியலா ளர் அலுவலகத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.ஞானேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில், பல தொழிற்சாலைகள் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகங்களின் பதிவுகளுடன் மட்டுமே இயங்குகின்றன. இவை வரிசெலுத்தியதற்கானதும், அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டதுக்குமான சான்றுகளே தவிர, தொழிற்சாலையின் பாதுகாப்பு பற்றியவை அல்ல. எனவே அனைத்து தொழிற்சாலைகளும் தொழில் திணைக்கள கைத்தொழில் பாதுகாப்பு பிரிவில் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு பதிவு செய்யும் போது நாம் தொழிற்சாலைகளுக்கு சென்று பாதுகாப்புக்குறைபாடுகள், சுகாதாரம் சேமநலன்கள் பற்றி ஆய்வு செய்து அவற்றிலுள்ள குறைபாடுகளை உரிமையாருக்கு தெரியப்படுத்துவோம். இதன்மூலம் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், இயந்திரசாதனங்களுக்கு ஏற்படும் சேதங்களைத் தெரிந்து கொண்டு அவற்றினை சீர்செய்து கொள்ளமுடியும்.

தற்போது தொழிற்சாலைகளை பதிவுசெய்தல் தொடர்பாக பிரதேசசபைகள், பிரதேச செயலகங்கள் மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுவருகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் தொழிற்சாலை பாதுகாப்பு தொடர்பாக தொழிற்சாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

அதன் பின்னர் கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்யாது இயங்கும் தொழிற்சாலைகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (54)

# சேதமடைந்த தேவாலயத்தை பங்குத்தந்தைகள் பார்வை

சிறுத்தீவில் அமைந்துள்ள லூர்த்து அன்னை ஹெவி சேதமடைந்துள்ளதாக நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை காலை அங்கே சென்று பார்வையிட்டு வந்துள்ள குருநகர் யாகப்பர் தேவாலயப் பங்கு தந்தை அருட்திரு றோமன் நேசராசா அடிகள் உட்பட்ட குழுவினர் தெரிவித்தனர்.

அவருடன் ஆலய திருஇருதய சபையைச் சேர்ந்த சி.கிறிஸ்தோப்பர், மண்டைதீவு கடற்படை முகாம் அதிகாரி ஆகியோரும் அங்கே சென்றிருந்தனர். பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற இருக்கும் லூர்த்து அன்னை ஹெவி ஆராதனையை நடத்துவதற்கான ஆயத்தப்படுத்தலுக்காகவே அவர்கள் அங்கே சென்று வந்துள்ளனர்.

கடந்த பதினைந்து வருடங்களாக மேற்படி ஹெவித்திருநாள் கொண்டாடப் படாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டிருப்பதாகவும் படையினரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (68)



**தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் வெள்ளாம்போக் கட்டி பொதுமண்டபம் சார்ந்த சுற்றுப்புறங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது லயன்ஸ்கழகத்தினர் மக்களுடன் இணைந்து துப்புரவுப்பணியில் ஈடுபடுவதைக் காணலாம்.**

# முரசின் இன்றைய பலன்

**(27.01.2013 - ஞாயிற்றுக்கிழமை)**

நந்தன வருஷம் தை மாதம் 14 ஆம் திகதி. நட்சத்திரம் பூசம் பின்னிரவு 5.18 வரை. திதி பூரணை முற்பகல் 10.58 வரை.
இராகுகாலம் 5.06 - 6.36 வரை.
சுபநேரம் 9.36 - 11.06 வரை. சித்தம், இன்று தைப்பூசம்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | உதவி கேட்டு வருவர். இயலாததிற்கு வாக்குறுதி தர வேண்டாம். தொழில், செழித்து சமூகத்தில் புகழ். குடும் பத்தேவை நிறைவேறும். மாணவர்கள் தேர்ச்சி. நற்செயலும் புகழும். |
| **ரிஷபம்** | மனதில் அமைதி. இல்லறத்துணையின் ஆலோசனை உதவும். தொழில் அனுகூலம். வரவை விட செலவு கூடும். மருத்துவச் செலவு. தியானம், தெய்வ வழிபாடு. வெளியூர் நற்செய்தி. |
| **மிதுனம்** | புதிய முயற்சிகளால் தாராள நன்மை. தொழில், வியத்தகு முன்னேற்றம். உபரி வருமானம். பெற்றோரின் தேவை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை. உயர்வு. |
| **கடகம்** | அடுத்தவர்களால் குழப்பம். தொழில், மந்தம். எதிர்பார்த்ததை விட வரவு குறையும். கவலை சூழும். நிதானம், மன ஒருமுகத் தன்மைக்கு உதவும். குடும்ப ஆதரவு நம்பிக்கை. |
| **சிம்மம்** | செயல்களில் புதுமை நேர்த்தி. உறவினர், நண்பர்கள் வாழ்த்து. தொழில், செழிக்கும். வரவு முன்னேற்றம். பாராட்டு கிடைக்கும். அறப்பணி ஆர்வம். எதிரிகள் விலகுவர். |
| **கன்னி** | எதிர்பார்த்த நல்ல காரியம் நிறைவேறும். மனதில் உற்சாகம். தொழில், தாராள வசதி அமையும். உறவினர்க்கு உதவுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும். விருந்து, விசேஷம். |
| **துலாம்** | உங்களை பிறர் புகழ்வதை விரும்புவீர்கள். திறமைக்கு பாராட்டு எதிர்பார்ப்பீர்கள். தொழில், சராசரி. வரவை விட செலவு கூடும். பணிகளை போராடி முடிப்பீர்கள். சிகிச்சை. |
| **விருச்சிகம்** | உங்களை சிலர் தவறாக புரிந்து கொள்வர். பொறுமை சிக்கல் தீர்க்கும். அளவான பணவரவு. சேமிப்பு செலவுக்கு பயன்படும். ஆரோக்கியத்திற்கு உணவில் கவனம். உறவு உதவி. |
| **தனுசு** | ரசிப்புத்திறன் வளரும். எவரிடமும் நல்அன்பு. தொழில், இடையூறு சரிசெய்வீர்கள். வரவுக்கேற்ப செலவு. பயணத்திட்டத்தில் மாறுதல். பிள்ளைகளால் பெருமை. ஓய்வு உடல்நலம். |
| **மகரம்** | குடும்பத்தினர் பாசம். எதிர்கால நம்பிக்கை வளரும். தொழிலில் ஆர்வமாய் பணிபுரிவீர்கள். உபரி வருமானம். வெகுநாள் நினைத்த பொருள் வாங்குவீர்கள். உடல் நலம் சீராகும். சாந்தம். |
| **கும்பம்** | சோர்வும் அசதியும். தொல்லைகள் கொஞ்சம் விலகும். தொழில், வளர்ச்சி. பணவரவு திருப்தி. கடன் தீரும். உறவினர் வகையில் செலவு. குடும்பத்தில் சச்சரவு வந்து நீங்கும். |
| **மீனம்** | எவரிடமும் தேவையற்று பேச வேண்டாம். உடல் நலத்தில் கவனம் நல்லது. தொழில், தாமதம். குறைந்த பணவரவு. வாகன பயணம் கவனம். மனதில் உடலில் வருத்தமிருக்கும். |

# பெரேரா, மத்தியூஸ் சிறப்பாட்டம்
# இலங்கை அணி இலகு வெற்றி





குசர் பெரேரா, மத்தியூஸ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி-20 போட்டியில் இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று சிட்னியில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி, டேவிற் வோனரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டேவிற் வோனர் 62 பந்துகளை எதிர்கொண்டு, மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 90 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் வோஹிஸ் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் குலசேகர, திசார பெரேரா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 138 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி, குசல் பெரேரா, மத்தியூஸ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது.

இறுதியில் இலங்கை அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மத்தியூஸ் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும், குசல் பெரேரா 33, திரிமன்ன 20, திசர பெரேரா ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைக்ஸ்வெல், டோஹெட்றி தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக டேவிட் வோனர் தெரிவானார்.

## அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் அசத்தினார் அசரங்கா



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர்பிரிவு ஆட்டத்தில் பெலாரஸின் விக்டோரியா அசரங்கா சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான இறுதி போட்டியில் தரவரிசை யில் முதலிடம் வகிக்கும் பெலாரஸ் நாட்டின் விக்டோரியா அசரங்கா, தரவரிசையில் 6ஆவது இடம் வகிக்கும் சீனாவின் லீ நாவை எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டைக் கைப்பற்றி லீநா முன்னிலை வகித்தார்.

இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட அசரங்கா தொடர்ந்து இடம்பெற்ற இரு செட்களையும் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். இறுதியில் விக்டோரியா அசரங்கா 4-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் லீநாவை வீழ்த்தி பட்டத்தை வென்றுள்ளார். கடந்த ஆண்டும் அசரங்கா கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## தலைமையின் முதல்வன்



அணியின் கப்டனாக இருந்து சிறப்பான துடுப்பாட்டச் சராசரி வைத்துள்ள வீரர்களில் முதலிடத்தை இந்திய அணியின் கப்டன் டோனி பெற்றுள்ளார்.

இத்தரப் படுத்தலில் 3000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒருநாள் அணியின் கப்டன்கள் மட்டும் கணக் கில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

இதில், 133 போட்டிகளில் விளையாடியுள்ள டோனி, 4738 ஓட்டங்களுடன் 57.78 சராசரி வைத்துள்ளார். இவருக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் ஓய்வு பெற்ற அவுஸ்ரேலியாவின் பொண்டிங் உள்ளார். இவர், 164 போட்டிகளில் 8497 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன், 42.91 தான் இவரது சராசரியாக உள்ளது.

### இவ்வரிசையில் முதல் பத்து கப்டன்கள் விபரம்

| பெயர் | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|
| 01. டோனி (இந்தியா) | 133 | 4738 | 57.78 |
| 02. பொண்டிங் (ஆஸி.) | 164 | 8497 | 42.91 |
| 03. அசார் (இந்தியா) | 173 | 5165 | 39.13 |
| 04. ஸ்மித் (தென்னா) | 150 | 5416 | 38.96 |
| 05. ரிச்சர்ட்ஸ் (மே.தீ.) | 105 | 3105 | 38.81 |
| 06. ஜெயசூர்யா (இலங்கை) | 118 | 4377 | 38.73 |
| 07. கங்குலி (இந்தியா) | 147 | 5104 | 38.67 |
| 08. குரோன்யே (தென்னா.) | 138 | 4070 | 37.69 |
| 09. ரணதுங்கா (இலங்கை) | 193 | 5608 | 37.64 |
| 09. லாரா (மே.தீ.) | 125 | 3725 | 35.82 |

### தொடரும் வெற்றி

இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்தாவதும், இறுதியுமான இன்றைய ஒரு நாள் போட்டியிலும் வெற்றிபெறுவோம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

அனைத்து வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதினால் இன்றைய தினமும் இங்கிலாந்து அணியை வீழ்த்த முடியும் எனத் தெரிவித்தார்.

## டேவிற் ஹசி நீக்கம்

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான முதலிரண்டு ஒருநாள் போட்டியில் விளையாடும் அவுஸ்ரேலிய அணியில் டேவிட் ஹசி நீக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவிற்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள மேற்கிந்தியத்தீவு அணி ஐந்து ஒருநாள் மற்றும் ஒரே ஒரு ருவென்ரி–20 போட்டியில் பங்கேற்கவுள்ளது. ஒருநாள் தொடரின் முதலிரண்டு போட்டிகள் பேர்த்தில் பெப்ரவரி 1,3ஆம் திகதிகளில் நடக்கவுள்ளன. இப்போட்டிகளுக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது.

இதில் மோசமான ஆட்டத்திறன் காரண–மாக, டேவிட் ஹசி நீக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் முடிந்த இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் இவரது செயற்பாடு திருப்தி அளிக்காததால் நீக்கப்பட்டார். இவருக்கு பதிலாக ஆரோன் பின்ச் தேர்வு செய்யப்பட்டார்.

அணி விவரம்: மைக்கல் கிளார்க் (கப்டன்), ஜோர்ஜ் பெய்லி, பென் கட்டிங், சேவியர் தோகர்டி, ஆரோன் பின்ச், ஹென்றிகுயஸ், ஹியூஸ், மிட்சல் ஜோன்சன், மேக்ஸ்வெல், மெக்கே, மிட்சல் ஸ்டார்க், மாத்யூ வேட், டேவிட் வோர்னர்.

## தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றி

(பொற்செப்ஸ்ற்றூம்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி த்ரில் வெற்றிபெற்று ஆறுதல் அடைந்தது. தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் பொற்செப்ஸ்ற்றூமில் நடைபெற்றது. ஏற்கனவே, சொந்த மண்ணில் தொடரை இழந்த தென்னாபிரிக்க அணிக்கு, உள்ளூர் இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் கட்டாய வெற்றி தேவை என்ற நிலை ஏற்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, குப்ரில், மக்கலம் ஆகியோர் வழமை போன்று சொதப்பியபோதும், மன்ரோ, பிராங்கிளின், இலோற் ஆகியோர் பொறுப்புடன் ஆடி ஸ்திரமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர். இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மன்ரோ 57, பிராங்கிளின் 53, இலோற் 54, வைட்ளிங் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொட்சோபி, மக்லறேன் தலா நான்கு



விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 261 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, ஸ்மித்தின் சிறப்பான துடுப்பாட்டம் அணியை வலுவான ஓட்ட எண்ணிக்கை பெற வழி வகுத்தது. இருப்பினும் ஸ்மித்தின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து விக்கெட்டுக்கள் சரிக்கப்பட, இறுதி நேரத்தில் ஆட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணிக்கு, இறுதிப் பந்தில் மூன்று ஓட்டங்களைப் பெற்றால் மாத்திரமே வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இறுதிப் பந்தை எதிர்கொண்ட மக்லறேன் சிக்ஸர் அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்று த்ரில் வெற்றி பெற்று ஆறுதல் அடைந்தது. இதில் ஸ்மித் 116, ஹெக் 31, இங்கிறம் 25, மக்லறேன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மில்ஸ், பிராங்கிளின், வில்லியம்ஸன் தலா இரண்டு விக்கெட்டுக்களைவீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஸ்மித் தெரிவானார். மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 2–1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.





அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு, கல்லூரி, வீர,வீராங்கனைகளுக்கான வீதியோட்டம் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது. வயது அடிப்படையில் நடைபெற்ற இவ்வீதியோட்டப் போட்டியில் 240இற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் 11 வயதுப் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற இரண்டு கிலோ மீற்றர் மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில், முதலாமிடத்தை இ. அபினயன், இரண்டாமிடத்தை உ. பிரியந்த், மூன்றாமிடத்தை ந. திவ்வியன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை ப. டனோஜா, இரண்டாமிடத்தை ஆ. சிந்துஜா, மூன்றாமிடத்தை ச. தர்சினி ஆகியோரும் பிடித்துக்கொண்டனர். 15 வயதுப் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற ஆறு கிலோ மீற்றர் மரதன் போட்டியில், ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை இ. ஜெனிஸ்ரன், இரண்டாமிடத்தை சு. கனிஸ்ரன், மூன்றாமிடத்தை பி. பிரியதர்சன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஜே. ஜெருசிகா, இரண்டாமிடத்தை க. மதுசிகா, மூன்றாமிடத்தை க. வாமினா, சி.அபிசனா ஆகியோரும் பிடித்துக்கொண்டனர். 21 வயதுப் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற எட்டு கிலோ மீற்றர் மரதன் ஓட்டத்தில், ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை செ. அகில்ராஜ், இரண்டாமிடத்தை நா. பிரணவன், மூன்றாமிடத்தை மு. நிறோஜன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை கு. நிகேதினி, இரண்டாமிடத்தை அ. சலோமி, மூன்றாமிடத்தை த. துலக்சி ஆகியோரும் பிடித்துக்கொண்டனர். இப்போட்டிக்கு அப்புத்துரை பிரசாந்தன் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (93)

விளையாட்டு செய்திகள்

# சாதனை வீரனுக்குப் பாராட்டுவிழா



(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பில் நடாத்தப்பட்ட இரண்டு கிலோ மீற்றர் நீள நீச்சல் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்ற யாழ். மத்திய கல்லூரி வீரர் அன்ரனி நியூரன் கல்லூரிச் சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

நீர்கொழுப்பு ரைகர் சார்க் சுவிமிங் கிளப்பினால் நடத்தப்பட்ட இரண்டாவது தேசிய ரீதியிலான நீச்சல் போட்டியில் அன்ரனி நியூரன் 60 நிமிடங்களுக்குள் நீந்தி முடித்து முதலிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

அன்ரனி நியூரன் சாதனையை கௌரவிக்கும் வகையில் கடந்த 25ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்(உதயன்), இராணுவ, பொலிஸ் சேர்ந்த நீச்சல் பயிற்றுவிப்பாளர் பியால்குமாரசிங்க, யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம்.ஜிவ்ரி, பொலிஸ் பரிசோதகர் ஆர்.கேரத், கேணல் சபித்த மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வென்றது திருநெல்வேலி அணி

(கொக்குவில்)

சென்றலைஸ்ட் புளுஸ் அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி 62 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் திரு நெல்வேலி கிரிக்கெட் அணியும், சென்றலைட்ஸ் புளுஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி, பிரபுவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி 28.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரபு 68, லவன் 32, சுரேந்திரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லவன், துவாரகன் தலா மூன்று, பிரசாத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் புளுஸ் அணி, கபில்ராஜ், சுரேந்திரன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இறுதியில் சென்றலைட்ஸ் புளுஸ் அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று 62 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் தீபன் 39, சுபாஸ் 26, கோபி 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபில்ராஜ், சுரேந்திரன் தலா மூன்று, சோபி இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

(17)

# கே.சி.சி.சி.யின் இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இன்றைய தினம் நான்கு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளதாகபோட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரு போட்டிகளும், யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இரு போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை இடம்பெறவுள்ள முதல் போட்டியில் பல்கலைக்கழகஅணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணியும், தொடர்ந்து மதியம் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள போட்டியில் காலை 8.30 மணிக்கு ஸ்கந்தாஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணியும், தொடர்ந்து மதியம் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து காமாட்சி அணியும் மோதவுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் போட்டி நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,இப்போட்டிகள் விரைவில் நடத்தி முடிக்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

(42)

# வலய மட்ட கால்பந்து
# நெல்லியடி மத்திய ம.வி. சம்பியன்

(நெல்லியடி)

வடமராட்சி வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சம்பியனாகியுள்ளது.

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகளின், இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து தேவரையாளி இந்து கல்லூரி அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அவ்வணி மேலும் ஒரு கோல் போட்டு வெற்றியினை உறுதி செய்தது.

இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வென்று வலயச் சம்பியனாகியது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் இமையாணன் ஜி.ரி. எம்.எஸ் அணியினை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. அபாரமாக ஆடிய இமையாணன் ஜி.ரி.எம்எஸ். அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (12)

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 12

– ருவான் எம் ஜயதுங்க –

முன்னாள் சிறுவர்போராளிகள் யுத்தம் தொடர்பான வன்முறைகளில் வெளிக்காட்டிய மிருகத்தனமான நிகழ்வுகள் காரணமாக ஒரு வரையறைக்கு உட்பட்ட நடத்தை சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். அதற்கு மேலதிகமாக மோதலுக்கு பிந்தைய காரணிகள், பல்வேறு அளவுகளில், பாதகமான நடத்தை விளைவுகளின் பாதிப்புகளையும் பங்களிப்புச் செய்யலாம். லெவ் வேய்கொட்ஸ்கி தெரிவித்துள்ளபடி, பிள்ளையின் கலாசாரம் மற்றும் அவன் வாழும் சமூகம் என்பன அவன் வளர்ச்சியை பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அந்த பிள்ளை முக்கியமான படிப்பினைகளை சமூகத் தொடர்புகள் மூலமாகவே ஏற்படுத்திக் கொள்ள முடியும் என வேய்கொட்ஸ்கி நம்புகிறார் (வேய்கொட்ஸ்கி, 1978)

பல ஆண்டுகளாக இலங்கை சிறுவர் போராளிகள் கடுமையான விதி முறைகளின் கீழ் தங்கள் நேரத்தை வளர்ந்த போராளிகளுடன் செலவிட்டு வந்துள்ளனர். அந்த பிள்ளைகள் தொடர்ச்சியாக, தங்களது உளவியல் நலன்கள் மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும், விரோதமான சூழ்நிலைகளையே வெளிக்காட்டி வந்திருப்பதால் அவர்களின் சிந்திக்கும் பாணி, மற்றும் புலனறிவு திட்டங்கள் என்பன மிகவும் தீவிரமானதும் மற்றும் வன்முறையானதுமான திசையில் மாற்றமடைந்திருக்கும். கேள்வி கேட்காமலே அட்டூழியங்களை நடத்தும்படி அந்தப் பிள்ளைகளுக்கு போதனை செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் நடத்தையில் மோசமான விளைவு-களை உருவாக்கிய இருண்ட யுத்தத்துக்கு அவர்கள் சாட்சியாக இருந்துள்ளார்கள். ஆதாரங்கள் உறுதிப்படுத்துவது, சிறுவர் போராளிகள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களில் படுகொலைகளை செய்வதற்கு பயன்படுத்தப் பட்டுள்ளார்கள் என்று.

மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் "ஸ்ரீலங்கா : அதிகார அகந்தையின் கட்டுக்கதைகள், சீர்கேடு மற்றும் கொலை" எனும் நூலை எழுதிய பேராசிரியர் ராஜன் ஹூல் ஆகியோர் சுட்டிக்காட்டுவது, எல்.ரீ.ரீ.ஈ, சிறுவர் போராளிகளைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான படுகொலைகளை செய்துள்ளார்கள் என்று. ஒரு சம்பவத்தில் (பேராசிரியர் ஹூல் விபரித்துள்ளபடி) ஒரு சிறுவர் போராளி அவர்கள் ஒரு முஸ்லிம் கிராமத்தை தாக்கியபோது இரண்டு வயதே நிரம்பிய ஒரு பச்சை பாலனை, அவனது தலையை சுவரில் மோதிக் கொலை செய்தானாம். அந்தக் குழந்தையை கொன்ற பின்னர் அந்த சிறுவர் போராளி அதன் தாயை குத்திக் கொன்றானாம்.






இத்தகைய கொடூரமான வெட்டிக் கூறுபோடும் செயல்களை நடத்திய சிறுவர் போராளிகள், தங்கள் கடந்தகால அதிர்ச்சிகரமான நினைவுகளிலிருந்து இன்னமும் விடுபடவில்லை. போர் அதிர்ச்சிகளின் வெளிப்பாட்டினால் உருவான பிள்ளைகளின் உளவியல் மற்றும் சமூக சீரமைப்பு காலப்போக்கில் மாற்றமடையும். உளவியல் நோய்களான, பி.ரி.எஸ்.டி, மனச்சோர்வு, இல்லாத நோய்களின் அறிகுறிகளை கற்பனை செய்தல் போன்றவை அவர்களின் நடத்தை பாணியை மாற்றலாம். கடந்த காலங்களில் அட்டூழியங்களை புரிந்துள்ள பிள்ளைகள், அவர்களது மனநல ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகள் உரிய முறையில் தீர்க்கப்படாவிடில், நடத்தை கோளாறுகள் அல்லது வளர்ச்சியடையும் சமூக விரோத ஆளுமை கோளாறு, போதை பிரச்சினை, போன்றவற்றை எதிர்கொள்ளும் தீவிரமான ஆபத்தில் உள்ளார்கள்.

நேபாளத்தில், கோஹட் மற்றும் பலர் (2008) முடிவு செய்திருப்பது, மோதலுக்கு பிந்திய காலத்தில் மோதலின்போது ஏற்பட்ட தழும்பு போன்ற காரணிகள், மனநல ஆரோக்கியத்துக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று. அவர் மாதிரிக்கு எடுத்துக் கொண்ட முன்னாள் சிறுவர் போராளிகள், அதிர்ச்சி நிகழ்வுகளின் வெளிக்காட்டலை சரிப்படுத்த சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின்னரும் ஒப்பீட்டளவில் மனச்சோர்வு மற்றும் பி.ரி.எஸ்.டி என்பனவற்றின் தாக்கங்களுக்கான குறிப்பிடத் தக்க உயர் அறிகுறிகளை வெளிப்படுத்தினார்கள். பெற்றன் கோர்ட் மற்றும் பலர் (2010), சியோரா லியோனில் உள்ள முன்னாள் சிறுவர் போராளிகளான ஆண்கள் மற்றும் பெண்கள் அடங்கிய 156 பேரைக் கொண்ட ஒரு குழுவினரிடத்தில் உளவியல் சரி செய்தலை ஆராய்வதற்கான ஒரு ஆய்வினை மேற்கொண்டார். அவர் 2 வருடங்களுக்கு மேலாக அந்த ஆராய்ச்சியை தொடர்ந்ததில், யுத்தத்தின்போது காயம்பட்ட அல்லது மற்றவர்களை கொன்ற இளைஞரிடத்தில் விரோதப் போக்கு அதிகரித்திருந்தது நிரூபிக்கப்பட்டது. உகண்டாவில் உள்ள முன்னாள் சிறுவர் போராளிகளிடத்தில் பல்வேறு விதமான நடத்தைக் கோளாறுகள் தோன்றியிருப்பதாகவும் மற்றும் அவர்களில் சிலர் அவர்களின் படைக்கலைப்பின் பின்னர் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக தண்டனையும் பெற்றுள்ளார்கள் என அறிக்கைகள் தெரிவித்தன. (அக்கேலோ, றிச்சட்டர்ஸ், மற்றும் றெயிஸ், 2006)

(தொடரும்)


# மேற்கத்திய அம்மன்

- சார்லஸ் -




திரைப்படக் கல்லூரியில் நான் சேர்ந்த புதிதில் ஒருமுறை என் பேராசிரியர் "தமிழ்ல ரஜினி கமலுக்கு அடுத்து பெரிய வசூல் குடுக்கிற ஸ்டார் யார் தெரியுமா?" என்று கேட்டார். நான் சீரியஸாக இரண்டு மூன்று பெரிய நட்சத்திர நடிகர்களின் பெயர்களைச் சொன்னேன். அவர் அதையெல்லாம் மறுத்துவிட்டு, "அம்மன்" என்றார். அது வெறும் கிண்டல் அல்ல, அன்றைய வசூல் நிலவரத்தின் படி உண்மையும் கூட என்பது எனக்குப் பின்புதான் புரிந்தது. இப்போது அம்மன் படங்கள் குறைந்திருந்தாலும், மீண்டும் தமிழில் அந்த ட்ரெண்ட் வராது என்று சொல்ல முடியாது. புதிய தொழில்நுட்பத்தோடு அப்படி ஒரு படம் வந்து பெரிய வெற்றி பெற்றால், பிறகு ஆண்டுக்கு 10 படங்கள் வந்துவிடும். ஏனென்றால் அதற்கான பார்வையாளர்கள் எப்போதும் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் மற்ற படங்களில் கூட, குறிப்பாகப் பெண் பார்வையாளர்களை நம்பி எடுக்கப்பட்ட குடும்பக் கதைகள், காதல் கதைகளில் கூட, மஞ்சள் புடவையும் வேப்பிலையுமாக, அதிரும் உடுக்கை ஒலிக்க ஒரு பாடல் வைத்திருப்பார்கள். திரையரங்குகளில் பல பெண்களுக்கு அருள்வந்து ஆடுவது என்பது 15 ஆண்டுகளுக்கு முன்புவரை சாதாரணமாக நடந்துகொண்டிருந்தது.

ஆங்கில "ஏலியன்" படங்களை "மேற்குலகின் அம்மன்"-படங்கள் என்றே நான் நண்பர்களிடம் கூறுவது வழக்கம். அவையும் வசூலுக்கு உத்தரவாதமானவை என்றே அங்கு அறியப்படுகின்றன. அறிவியல் புனைவு என்று சொல்லப்பட்டாலும், அதில் இரண்டு சதவீதமே அறிவியல் இருக்கும் மற்றதெல்லாம் புனைவுதான். அமெரிக்க சினிமாவின் தொடக்க காலத்திலேயே ஏலியன்கள் திரையில் தோன்ற ஆரம்பித்துவிட்டார்கள். அந்த வகைப் படங்களை நல்ல தரத்தோடும் சில இயக்குனர்கள் செய்திருக்கிறார்கள். பழையவர்களில் இயக்குனர் ரொபேர்ட் வைஸ் எனக்குப் பிடிக்கும். பிறகு வந்தவர்களில் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், ஜோர்ஜ் லூகாஸ், ரிட்லி ஸ்கொட், ஜேம்ஸ் கமரூன் போன்றவர்கள் அந்தத் தளத்தில் மிகச் சிறந்த படங்களைத் தந்து மிகப் பெரிய வெற்றிகளிலும் திளைத்திருக்கிறார்கள்.




முந்தைய ஏலியன் படங்களிலிருந்து ஏதோவொரு விதத்தில் வித்தியாசப்பட்டு, புதியது போல் தோன்றக்கூடிய கதையை எடுத்துக்கொண்டு, அதில் புத்தம் புதிய தொழில்நுட்ப மாயாஜாலங்களைப் புகுத்திவிடுவது என்பது அவர்களின் வெற்றிக்கான ஃபோர்முலாக்களில் முக்கியமான ஒன்று. சென்ற ஆண்டுகளில் "அவதார்" "டிஸ்ட்ரிக்ட் நைன்" போன்ற மிகச் சிறந்த ஏலியன் படங்கள் வந்தன.

cowboys and aliens, அமெரிக்காவின் இரண்டு மிகப் பெரிய வெற்றிக் கதைக் களங்களான மேற்கத்திய கௌபோய் மற்றும் சயன்ஸ் ஃபிக்ஷன் ஏலியன் என்கிற இரண்டு பழைய கள்ளையும் ஒரு கோப்பையில் ஊற்றி, பிரபல நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், பெரிய பொருட்செலவு என்று எல்லாம் போட்டுக் கலந்து செய்திருக்கும் கோக்டெய்ல்.

அடுத்தது, attack the block என்ற இங்கிலாந்து நாட்டின் சின்ன பட்ஜெட் படம். லண்டனின் மத்திய வர்க்க மக்கள் வசிக்கும் காலனி ஒன்றின் விடலைப் பசங்களுக்கும் அங்கு வந்துவிட்ட ஏலியன்களுக்குமான சண்டையைப் பற்றிய சுவாரஸ்யமான கதை. இளம் படைப்பாளிகளின் "விளையாட்டுத்தனமான" இந்த முதல் முயற்சி, திரைப்பட விழாக்களில் கவனத்தையும் பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது.

## மண்புழு!

- ◆ மண்புழுவில் 2000இற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன.
- ◆ 2 செ.மீ. நீளத்திலிருந்து 4 மீற்றர் வரை பல அளவுகளில் மண்புழுக்கள் உள்ளன.
- ◆ மண்புழுவுக்குக் கண்களும் காதுகளும் கிடையாது.
- ◆ மண்புழு தோல் மூலமாகத்தான் சுவாசிக்கின்றது.
- ◆ நீண்ட நாட்களுக்கு உணவில்லாமல் மண்புழுக்களால் வாழ முடியும்.
- ◆ மண்புழு இருபாலின உயிரி.
- ◆ ஓர் ஆண்டில் சுமார் 12 தொன் மண்ணை மண்புழுக்கள் உழுதுவிடும்.



# பரோட்டா, புரோட்டா

**சில்வியா என்ற புனைபெயரில் எம்.டி.முத்துக்குமாரசாமி எழுதிய ‘தமிழ் மகளிர்க்கு அசரீரீ சொன்ன புராணக்கதை’ என்ற சிறுகதையில்,**

“பரோட்டா, பரோட்டா என்றழைக்கப்படும் விசித்திர வடக்கத்திய மைதா வஸ்து தமிழரின் உணவுப் பொருளாகியது. ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, தேசிய நெடுஞ்சாலைக்கு தேசிய நெடுஞ்சாலை என முளைத்த எண்ணற்ற டீக்கடைகளில் பரோட்டா செய்யப்படுவதைக் காண்பது கண் கொள்ளாக் காட்சி. கறு கறுவென்று கட்டுமஸ்தான உடம்புடனும் புஜ பலத்துடனும் விளங்கும் ஒரு தமிழரே பரோட்டா செய்யத் தகுதியானவர். அவர் மைதாவுடன் தண்ணீரும் எண்ணெயும் கலந்து இரண்டு கால்பந்துகள் இணைந்திருக்கும் அளவில் உருண்டையாக உருட்டி டமீர் டமீரெனக் கல்லில் அடித்து மாவைப் பக்குவப்படுத்துவார். பின் அதை மென்மையாக வசியப்படுத்தி லாவகமாக காற்றில் வீச, மந்திரத்தால் கட்டுண்டது போல துணியென விரியும் மாவு. இவ்வாறாக அது காஷ்மீரப் பட்டின் மெல்லிசான தன்மையை அடைந்தவுடன் அதை லேசாக மடித்து வட்டமாகச் சுற்றி வைப்பார். இவ்வளவு நுணுக்கமான செயற்பாடுகளுக்கு பரோட்டா சிருஷ்டியில் உட்பட்டாலும் அதை உண்பதற்கு அசுரபலம் வேண்டும். பரிசாரகரே பெரும்பாலும் பரிமாறும்போது பரோட்டாவை பிய்த்துப் போட்டு பேருதவி செய்வார். பசித்த வயிற்றில் கல்லென நிறையும் பரோட்டாவை சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழகிப் போன தமிழர்களுக்கு ஐயகோ வீட்டில் இப்பலகாரத்தை ருசிக்கும் வாய்ப்பு லபிக்கவே இல்லை. ஏனெனில் புஜகீர்த்தியற்ற தமிழ் மறமகளிரால் இவ்வடக்கத்திய உணவுப்பண்டத்தை செய்ய முயற்சித்த போதெல்லாம் ஏமாற்றமும் தோல்வியுமே மிஞ்சியது. பெரும்பான்மையான நேரங்களில் வெந்த மைதா களியையே அவர்களால் உருவாக்க முடிந்தது.”



ஷங்கர்ராமசுப்ரமணியன் எழுதிய கவிதை;



நான் தமிழ் புரோட்டா
நீங்கள் என்னை தூள்தூளாக்குங்கள்
மீண்டும் நீர் ஊற்றிச் சேர்த்து
உருட்டிப் பிசைந்து
மூர்க்க பலத்தால் என்னை
அடித்துத் துவைத்தெடுங்கள்
பாலியெஸ்டர் துணிபோல்
என்னை நெகிழ்வாக்கி
நீட்டி விசிறடித்து
காற்றுதங்கும் பலூன் பந்துகளாக
என்னை மேஜையில் அடுக்குங்கள்.
அப்போதும் ஒளியூடுருவும் கடவுள் போல்
நான் ஒளிர்வேன்.
பின்னர் மீண்டும் தட்டி மடித்து
வட்ட சதுர முக்கோணங்களாக
எண்ணெய் கொதிக்கும்
வாணலியிலோ
கல்லிலோ இட்டுப் பொரித்தெடுங்கள்
உங்கள் அரும்பசிக்குச் சுவையான
உணவாய் நான் மாறுவேன்...
உங்கள் மாமிசமும் சேர்ந்த
குழம்பில்
நான் மிதந்தூறிக் கொண்டிருக்கிறேன்.
மீண்டும்
மடிப்பு மடிப்பாக
தூள்தூளாக கரைந்துபோகக்
காத்திருக்கும்
தமிழ் புரோட்டா தான்
நான்.

## பெயர்க் காரணங்கள்

- உப்புமாவை சாப்பிட்டதும் தாகம் எடுக்கும். உடனே தண்ணீர் குடிப்போம். வயிற்றிலுள்ள உப்புமாவும் தண்ணீரும் சேர்த்து வயிற்றை உப்பச் செய்துவிடும். அதனால் தான் அதற்கு உப்புமா என்று பெயர் வந்தது.
- அரிசியில் உடைந்ததை நொய் என்றும் குருணை என்றும் சொல்கிறோம். ஏன்! நொய்து என்றால் லேசானது என்று பொருள். அரிசியைவிட நொய்தாய் (லேசானதாய்) இருப்பதால் நொய் என்று பேர் வந்தது. அதைவிடச் சிறியது குறுணை. குறுநொய் என்பதே குறுணை ஆயிற்று!

**(‘கி.வா.ஜ. பதில்கள் என்ற நூலிலிருந்து’)**






இஸ்மத் சுக்தாய் ((1915 - 1991). இந்தியாவில் பி.ஏ பட்டமும், கல்வியியல் பட்டமும் பெற்ற முதல் இஸ்லாமியப் பெண் ஆவார். 1941இல் “லிகாப்” என்ற சிறு கதை மூலம் உருது இலக்கியத்தில் அறிமுகமானவர்.

இவர் திரைப்பட இயக்குநர் ஷாகித் லத்தீபை தனது குடும்பத்தின் எதிர்ப்பை மீறி 1942இல் திருமணம் செய்து கொண்டார். அவரோடு இணைந்து ஆறு திரைப்படங்களையும் அவரின் மறைவிற்குப் பிறகு ஆறு திரைப்படங்களையும் தயாரித்து இயக்கியுள்ளார். இன்றளவும் இவர் எழுதிய ‘Crooked Line’ என்ற நாவல் இந்திய துணைக் கண்டத்தில் பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. நவீன உருது இலக்கியத்தில் மண்ட்டோ, கிஷன் சந்தர், பேடி, இஸ்மத் சுக்தாய் நால்வரும் பிரதான தூண்களாகக் கருதப்படுகிறார்கள்.

# மண்ட்டோ - என் நண்பன் என் எதிரி

**- இஸ்மத் சுக்தாய்**



எப்போதும் நானும் மண்ட்டோவும் ஐந்து நிமிடம் சந்திக்கலாம் என்று நினைத்தால் அது ஐந்து மணி நேரச் சந்திப்பாக மாறியது. அவரோடு விவாதம் செய்வதென்பது ஒருவரின் புத்தியைக் கூர்ப்படுத்துவது போலிருக்கும். விளக்குமாற்றைக் கொண்டு மூளையில் படிந்துள்ள ஒட்டடைகளையெல்லாம் அகற்றி சுத்தம் செய்வது போலிருக்கும். சில சமயங்களில் எங்கள் உரையாடல்கள் தீவிரமடைந்து மிக நீளமான நூல் சிக்குண்டது போலவும், சிந்திப்பதற்கும், புரிந்து கொள்வதற்குமான திறமை முழுக்க அழிக்கப்பட்டது போலவும் அமையும். சில சமயங்களில் எங்களின் விவாதங்கள் சண்டைகளாக உருமாறி, சங்கடமான விளைவை ஏற்படுத்தும் முடிவுக்குக் கொண்டு வரும். தோல்விகளால் ஏற்படும் ஏமாற்றத்தை நான் மூடி மறைக்கும் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தேன். ஆனால் மண்ட்டோ அழத் தொடங்குவார். அவரின் கண்கள் மயில் தன் தோகையை விரிப்பது போல் விரிந்து, மூச்சின் சுவாசக் குழாய் பெரிதாகி, வாய் கோணலாகி, அவரின் முகம் சுருங்கி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தனக்கு உதவியாய் ஷாகித்துக்கு அழைப்பு விடுவார். அத்தகைய சமயங்களில் எங்களின் விவாதங்கள் இலக்கியம் தத்துவம் என்பதிலிருந்து விலகி குடும்ப விஷயங்கள் பக்கம் திரும்பும். மண்ட்டோ அறையை விட்டுச் சீறி வெளியேறி விடுவார்.

ஆனால் நாங்கள் காலையில் சண்டை போட்டுக் கொண்டாலும் மறுபடியும் மாலையில் சந்திக்க வேண்டி வந்தால் ஏதும் நடக்காதது போல் அன்போடு வரவேற்பார். நாங்கள் வழக்கம்போல் அனல் பறக்கும் விவாதத்தில் ஈடுபட்டாலும் முதல் சில நிமிடங்களுக்கு நாங்கள் எங்களை மிக மென்மையாக வெளிப்படுத்திக்கொண்டு, மற்றொருவரின் சிந்தனையை முழுமனதோடு ஏற்றுக் கொள்வதுபோல் பாவனை செய்வோம். ஆனால் இந்த பாவனைகள் எல்லாம் சீக்கிரத்தில் காற்றில் மறைந்து வழக்கம்போல் பட்டாசு வெடிக்கத் தொடங்கும். எங்களின் வார்த்தைகள் ஒரு தோட்டாவுக்கான வேகத்தைக் கொண்டது. பல சமயங்களில் மற்றவர்கள் வேண்டுமென்றே வேடிக்கைக்காக எங்களை முட்டி மோதிக் கொள்ள வைக்க, நாங்கள் எரிச்சலடைந்து எங்களுக்குள்ளான கருத்து வேறுபாட்டை அச்சமயத்திற்கு ஒதுக்கி வைத்துக் கொள்வோம். நாங்கள் எங்களின் சந்தோஷத்திற்காகத்தான் விவாதித்தோமே தவிர கோழிச்சண்டை போட்டு மற்றவர்களை சந்தோஷப்படுத்த அல்ல. நாங்கள் எவ்வளவு விவாதங்களில் ஈடுபட்டாலும் நாங்கள் ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பலமான ஒரு “அணி”யாய் இருந்து மற்றவர்களை வியக்க வைக்க வேண்டும் என்பது மண்ட்டோவின் கருத்து.

ஆனால் பல சமயங்களில் நான் அதை மறந்து என் “அணி”இற்கு உண்மையாக இருக்க வேண்டி இருப்பதால், கலைக்கப்பட்ட சீற்றத்துடன் வெளியேறும் குளவி போல் கொட்டத் துவங்கி விடுவேன்.

மண்ட்டோ தற்புகழ்ச்சிக்குப் பழக்கப்பட்டவர். ஆனாலும் நான் அவருடன் இருக்கும் பொழுது என்னையும் அதனுள் இணைத்துக் கொள்வார். அவரைப் பொறுத்தமட்டில் இரண்டே இரண்டு எழுத்தாளர்கள்தான் உருப்படியானவர்கள். ஒன்று அவர். மற்றொன்று அவர்.

மண்ட்டோவின் அகால மரணத்தில் எனக்கும் பங்கிருக்கிறது என்று என் இதயம் ஏன் இப்படிக் கதறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எனது முன் சட்டையில் அவரின் இரத்தம் சிதறிக் கிடக்கிறது. அதை என் இதயம் மட்டுமே பார்க்க முடியும். அவரை மரணம் கொள்ளவைத்த இந்த உலகம்தான் என்னுடைய உலகமும். இன்று அவரை மரணங்கொள்ள வைத்தது - நாளை என்னையும் அதைப் போல மரணம் கொள்ள அனுமதிக்கும். பிறகு மக்கள் துக்கம் கொண்டாடுவார்கள். என் குழந்தைகளின் எதிர்காலம் அவர்களின் நெஞ்சில் பாரமாய்க் கனக்கும். கூட்டங்கள் நடத்தப்பட்டு நிதி திரட்டப்படும். ஆனால் நேரமின்மை காரணமாக ஒருவரால் கூட அந்தக் கூட்டத்திற்கு வர முடியாமல் போகும். காலம் நகர, அவர்கள் நெஞ்சில் உள்ள பாரம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கும். பிறகு மக்கள் எல்லாவற்றையும் மறந்து போவார்கள்.




# பாவனை தொற்றக்கூடியது

தற்காலத்தில் கையடக்கத்தொலைபேசியை பாவிக்காதோர் இல்லை யெனலாம் இந்நிலையில் கையடக்கத்தொலைபேசி பாவனை தொடர்பில் புதிய ஆய்வொன்று வெளியாகியுள்ளது.

ஒருவர் தனது கையடக்கத்தொலைபேசியை எடுக்கும் போது அதனைப் பார்க்கும் மற்றுமொருவரும் அதையே செய்வதாக ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும் நமது பார்வையில் படுமொருவர் கையடக்கத்தொலைபேசியை உபயோகிப்பாராயின் நமக்கும் நமது கையடக்கத்தொலைபேசியினை உபயோகிக்கும் ஆவல் எழுவதாக ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கையடக்கத்தொலைபேசிகளை உபயோகிக்கும் விதத்தினை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் வயதானவர்களிடையே இவ் ஆராய்ச்சியின் முடிவு மாறுபட்டதாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வயதானோர் பொதுவாக கையடக்கத்தொலைபேசிகளில் அதிகளவு தங்கியிருப்பதே இதற்கான காரணமெனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.


# மூடுவிழா

மைக்ரோசொப்ட் தனது இணையவழி உரையாடல் சேவையான "லைவ் மெசென்ஜரை" எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி முதல் நிறுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

லைவ் மெசென்ஜருக்கு பதிலாக அதன் பாவனையாளர்களை ஸ்கைப்பிற்கு நகர்த்துவதற்கு மைக்ரோசொப்ட் எதிர்பார்த்துள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனமானது ஸ்கைப் சேவையினை 8.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு கொள்வனவு செய்தது.

எனவே தனது "லைவ் மெசென்ஜர்" பாவனையாளர்களை ஸ்கைப்பிற்குள் கொண்டுவருவதற்கு மைக்ரோசொப்ட் முடிவு செய்தது.



இதனையடுத்து "லைவ் மெசென்ஜர்" சேவையை நிறுத்தப் போவதாக கடந்த வருடம் நவம்பர் மாதம் அறிவித்திருந்தது.

இந் நிலையில் இதற்கான தினத்தை தற்போது அறிவித்துள்ளது.

"லைவ் மெசென்ஜர்" சேவையினை மாதாந்தம் சுமார் 300 மில்லியன் பேர் வரை தற்போது பாவித்து வருவதாக மைக்ரோசொப்ட் தெரிவிக்கின்றது. மேலும் லைவ் மெசென்ஜரில் உள்ள தொடர்புகளை ஸ்கைப்பில் பெற்றுக்கொள்ள முடியும் என மைக்ரோசொப்ட் தெரிவிக்கின்றது.




A.J.Nimalrajan

# Camstudio




கணனித் திரையில் நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்தையும் பதிவு செய்து அதனை ஒரு வீடியோ பைலாக உருவாக்கித் தரக்கூடிய ஒரு மென்பொருளே கேம்ஸ்டுடியோ, இது ஒரு இலவச ஓபன் சோர்ஸ் மென்பொருள். திரை நடவடிக்கைகளை மாத்திரமன்றி கூடவே அதனுடன் ஒலியையும் பதிவு செய்துகொள்ளலாம்.

கேம்ஸ்டுடியோவில் என்னென்ன வசதிகள் உள்ளன?

* AVI வீடியோ பைலை ப்ளாஸ் பிளேயரில் இயங்கத்தக்க SWF பைலாக மாற்றிக்கொள்ளலாம்.
* உருவாக்கும் வீடியோ படங்களுக்கு ஒலிவாங்கி அல்லது ஒலிபெருக்கி மூலம் ஒலியை இணைக்கலாம்.
* வீடியோ படங்களுக்குத் தலைப்பிடலாம். குறிப்புகளை வழங்கலாம்.
* உருவாக்கும் வீடியோ பைலை திகதி மற்றும் நேரத்தை பைல் பெயராகக் கொண்டு தானாகவே சேமித்துக்கொள்ளலாம்.
* வீடியோ பைலின் தரத்தைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ முடியும். வீசீடி அல்லது டீவிடியில் பதிவு செய்வதற்கான உயர் தரத்திலான வீடியோவையும் ஈமெயிலில் அனுப்பக்கூடியவாறான சிறிய பைல் அளவு கொண்டதாகவும் பதிவு செய்துகொள்ளலாம்.
* திரை முழுவதையும் அல்லது திரையில் விரும்பிய ஒரு பகுதியை மாத்திரம் பதிவு செய்துகொள்ளலாம்.

1.3 மெகாபைட் அளவு கொண்ட ஒரு சின்னஞ் சிறிய மென்பொருளான இதனை விண்டோஸின் எந்தப் பதிப்புடனும் நிறுவிக்கொள்ள முடியும்.

கேம்ஸ்டுடியோவை எதற்கெல்லாம் பயன்படுத்தலாம்?

* எந்தவொரு பயன்பாட்டு மென் பொருளுக்கான டிமோ (Demo) வீடியோ காட்சிகள் மற்றும் பாடங்களை (Tutorial) உருவாக்க முடியும்.
* பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம்.
* கணனியில் தோன்றும் பிரச்சினைகளை வீடியோவாகப் பதிவு செய்து தொழில்நுட்ப வல்லுநர்களிடம் காண்பித்து அதற்கான தீர்வைப் பெறலாம்.
* கணனியில் அவ்வப்போது தெரிந்துகொள்ளும் புதிய விடயங்களை வீடியோவாகப் பதிவுசெய்து வைக்கலாம்.

மிகவும் எளிமையான இடை முகப்பைக் கொண்ட கேம்ஸ் டுடியோவை இயக்கும் விதத்தை ஓரிரு நிமிடத்திலேயே கற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எங்காவது மாட்டிக்கொள்ளும் பட்சத்தில் உதவிக் குறிப்பும் தரப்படுகிறது.

கேம்ஸ்டுடியோ மென்பொருளை www.camstudio.org எனும் இணைய தளத்திலிருந்து இலவசமாக டவுன்லோட் செய்துகொள்ளலாம்.

# விண்டோஸ் திருட்டை ஒழிக்க மைக்ரோசொப்டின் புதிய வழி

XLEGAL
Are you a victim of pirated software? Then help us to help you.
Microsoft

புதியதாக கணனி ஒன்று வாங்குகையில் விண்டோஸ் சிஸ்டம் பதிந்து கொடுக்கப்படுகிறது.

கணனி தயாரிக்கும் நிறுவனங்கள் இதற்கான ஒப்பந்தத்தினை மைக்ரோசொப்ட் நிறுவனத்திடம் மேற்கொண்டு, ஒவ்வொரு கணனிக்கு பதியப்படும் விண்டோஸ் சிஸ்டத்திற்கான உரிமத்தைப் பெற்று அதற்கான எண்ணையும், ஒப்பரேட்டிங் சிஸ்டம் டிஸ்க் அல்லது சிஸ்டம் மீட்பதற்கான ரெகவரி டிஸ்க்கினை வழங்குகின்றன.

கணனியை அசெம்பிளிங் செய்து கொடுப்பவர்கள், விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் பைரசி பதிப்பு என்று அழைக்கப்படும் நகல் பதிப்பினை பதித்துக் கொடுப்பார்கள்.

இது உரிமம் இல்லை என்பதால், மைக்ரோசொப்ட் இணையத்தளத்திலிருந்து எந்த சேவையையும் பெற முடியாது. இவ்வாறு இயங்குவது ஒரு வகையில் திருட்டு வழி என்றே கூற வேண்டும்.

மைக்ரோசொப்ட் நிறுவனம் இதனைக் கண்டறிவதற்கென பலரை நியமித்து, அவர்களும் முறையாக உரிமம் இல்லாமல் விண்டோஸ் சிஸ்டம் பயன்படுத்துவோரைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

குறிப்பாக நிறுவனங்கள், வர்த்தக மையங்களில் இது போல பயன்படுத்துவது கடுமையாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. முறையாக உரிமம் பெற்று, அதற்கான சிடி பெற்றவர்கள் பலர், உரிமம் குறித்த தகவல்களை தொலைத்து விடுகின்றனர்.

சி.பி.யு. கேபினில் ஒட்டப்பட்டு வரும் லேபிள் நாள்டைவில் கிழிந்து மறைந்து விடுகிறது. இதனை எடுத்துப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் அல்லது, கீ எண்ணை எழுதி இருக்க வேண்டும்.

# கணனி உலகில் புரட்சியை ஏற்படுத்தவுள்ள 'Paper Tab'!





கணனியுலகில் புரட்சியை ஏற்படுத்தும் புதிய கண்டுபிடிப்பொன்று லாஸ் வெகாஸில் நடைபெற்றுவரும் இலத்திரனியல் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'The PaperTab' என்று பெயரிடப்பட்டுள்ள இது கணனிகளின் வரைவிலக்கணத்தையே மாற்றியமைக்கும் என தொழில்நுட்ப நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தற்போது சந்தையில் கிடைக்கின்ற டெப்லட்கள் போலன்றி மடியக்கூடிய, மிக மெல்லிய, கீழே விழுந்தாலும் பாதிப்படையாத திரையாக இது உள்ளது.

இத்திரையானது 10.7 அங்குலமானது என்பதுடன் அது துல்லியமானது. இதன் சில செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு பாவனையாளர் அதனை சற்று வளைத்தால் போதுமானது.

மேலும் Intel® CoreTM i5 புரசசரின் மூலம் இது இயங்குகின்றது.

இதன் செயற்பாடுகளும் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது உதாரணமாக ஒரு மின்னஞ்சல்கள் கணக்கை எடுத்துக்கொண்டால் அதன் Inbox, Outbox, மற்றும் Compose Mail ஆகிய பிரிவுகள் திரையில் ஒன்றாகத் தோன்றாமல் வெவ்வேறு திரையில் பகுதி பகுதியாகத் தோன்றும்.

எனவே பல பேப்பர் டெப்களை கணனி போன்று செயற்படுத்த முடியும்.

இண்டெல் மற்றும் பிரித்தானிய பிளாஸ்ரிக் நிறுவனமான பிளாஸ்ரிக் லொஜிக் ஆகியன கனேடிய குயின்ஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்தே இதனை உருவாக்கியுள்ளன.

இது எப்போது விற்பனைக்கு வரும் என்பது குறித்து இதனை அறிமுகப்படுத்திய நிறுவனம் அறிவிக்கவில்லை.

# 14 வயதுச் சிறுமியைக் கடத்திய 24 வயது இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பிரதேசத்தில் 14 வயதுச்சிறுமியை காதலித்து பெற்றோரிடம் இருந்து கடத்திச் சென்ற புத்துரைச்சேர்ந்த 26 வயதுடைய இளைஞர்ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கடந்த 16ஆம் திகதி கைது செய்துள்ளதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு பிரதிப்பொலிஸ்மா அதிபர் மேலம் தெரிவிக்கையில்; குறித்த சிறுமியின் பெற்றோரால் கொடிகாமம் பொலிஸாரிடம் செய்து கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அன்றையதினமே குறித்த சிறுமி மீட்கப்பட்டதுடன் இந்தச் செயலைப் புரிந்த நபரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் தொடர்ந்து தகவல்தெரிவித்த அவர், கடந்த ஒருவார காலப் பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22 பேர் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கைது செய்யப்பட்டதாகவும் இதனைவிட சட்டவிரோத மதுபானவிற்பனையில் ஈடுபட்ட நால்வரும் கஞ்சாவிற்பனை செய்த 17 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதில் ஊர்காவற்துறைப்பகுதியில் ஒன்பது பேரும் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கொடிகாமம், சுன்னாகம் போன்ற பகுதிகளில் இருந்து எட்டுப் பேரும் உள்ளடங்குவதாகவும் தெரியவருகின்றது. அத்துடன் குடிபோதையில் வாகனம் செலுத்தியது தொடர்பில் ஆறு பேர் மீதும் டெங்குப்பெருக்கத்திற்கு ஏற்றவாறு சூழலை மாசுபடுத்தியவர்கள் 10 பேர் மீதும் நீதிமன்ற வழக்கில் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.வீதியிலும் பொதுஇடங்களிலும் மது அருந்தியதற்காக 19 பேர் மீதும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வைரஸ் காய்ச்சல் தொற்று

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஒருவகையான வைரஸ் காய்ச்சலினால் பிடிக்கப்பட்ட பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையினை அடுத்தே சுகாதாரத் தொற்றுக்கள் ஏற்பட்டு இவ்வகையான காய்ச்சல் பரவியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையில் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பலர் சிகிச்சையைப் பெற்று வரும் நிலையில் இவ்வைத்திய சாலையில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வைத்தியசாலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதுடன், ஒரு வைத்தியரே கடமையில் இருப்பதால் காய்ச்சல் தவிர ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்ட மக்களும் சிகிச்சை பெறுவதில் பெரும்சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (கே)

## போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கள நிலை, அலுவலக குழு 2 முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்தரம் 11 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் மும்மொழிகளிலும் கொழும்பில் நடத்தப்படவுள்ளதுடன், இதற்கு விண்ணப்பிப்போர் 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இப்பரீட்சை தொடர்பான ஏனைய விபரங்களை 24 01.2013 வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிட முடியும்.

## வியாபார நிலையங்களில் திருடர்கள் கைவரிசை

(ஈச்சமோட்டை)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சுண்டிக்குள கிராமத்தின் ஈச்சமோட்டைப்பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் மீது தொடர் திருட்டுச் சம்பவங்களில் திருடர்கள் கோஷ்டியாக ஈடுபட்டுவருகின்றனர். இச்சம்பவங்களானது கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த இரு வாரங்களுக்கு முன் ஈச்சமோட்டை விதானையார் வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையத்தில் இரு தடைவைகள் இத் திருடர்கள் தமது கை வரிசையினை காட்டியிருந்தனர். இதே போல் ஈச்சமோட்டை வீதியில் மறவர் குளத்திற்கு முன்னால் இருக்கும் வியாபார நிலையத்திலும் தமது கைவரிசையினை காட்டியுள்ளனர். பூட்டை உடைத்து இவ்வியாபார நிலையத்தினுள் உட்புகுந்த திருடர்கள் சிகரெட், மா பைக்கற், தொலைபேசி அட்டைகளினைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேநேரம் இவ் வீதியில் வந்த பிச்சை எடுப்பவரின் கைப்பையினைப் பறித்துச் சென்ற திருடர்கள், அன்றைய தினம் அவர் பிச்சை எடுத்து சேகரித்த பணத்தினையும், கைபையில் இருந்த உணவினையும் எடுத்து விட்டு அப்பையினை பிறிதொரு இடத்தில் விட்டு சென்ற சம்பவமும் இடம் பெற்றுள்ளது. (42)



கிளிநொச்சி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் யுத்தத்தினால் இறந்த அனைத்து இலங்கையருக்கான சர்வ மதப் பிரார்த்தனை அண்மையில் இடம்பெற்றது. இதில் கிறிஸ்தவ மதகுரு உரையாற்றுவதையும் அருகில் சர்வமதகுருமார் அமர்ந்திருப்பதையும், பாடசாலை மாணவர்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் காணலாம். (90)

## பதிவிறக்கப் பெட்டகம்

நிலப்பிரபுத்துவ கால அறங்கள் நமக்கு இருந்தன. நமக்கு பெரியவர்கள் அவற்றைச் சொல்லி வளர்த்தனர். இன்று நாம் வேகமாக முதலாளித்துவத்திற்குள் நுழைகிறோம். நிலப்பிரபுத்துவ அறங்களை கைவிடுகிறோம். ஆனால் முதலாளித்துவத்துக்கு பல்வேறு அறங்களும் ஒழுக்கங்களும் உண்டு. அவற்றை நாம் கற்றுக்கொள்வதில்லை. இன்று தமிழ்வாழ்வின் மிகப்பெரிய பிரச்சினை இதுவே. **– ஜெயமோகன்**

ஒவ்வொரு நாள் காலையிலும் நம்பிக்கைகளை அரற்றியவாறு அறுந்து தொங்கும் மனதின் நாண்களை இழுத்துக் கட்டினாலும் மாலைக்குள் அது தொய்ந்து போய்விடுகிறது.

**– சுந்தர ராமசாமி ‘குழந்தைகள் பெண்கள் ஆண்கள்’ நாவலில்**

ஒரு இளம் எழுத்தாளர் என்னுடைய எழுத்தைத் திருடிப் பயன்படுத்திக் கொண்டதாகக் கூறுகிறார்கள். அந்த இளம் எழுத்தாளன் என்னிடமிருந்து ஒன்றை எடுத்துக்கொண்டதை அறிந்தபோது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியே உண்டானது. ஏனென்றால் அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். எங்களிடமிருந்து நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். முதலில் நீங்கள் எங்களிடமிருந்து திருட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம், ஏனென்றால் உண்மையில் உங்களால் ‘திருடவே’ முடியாது. நீங்கள் எடுத்துக் கொண்டது எல்லாமே நாங்கள் உங்களுக்குத் தந்ததுதான். நீங்கள் அதை உங்களின் குரலிலேயே பதிவுசெய்வீர்கள். அப்படித்தான் உங்களின் சொந்தக் குரலை நீங்கள் கண்டடைய முடியும். அப்படித்தான் நீங்கள் ஆரம்பிக்க முடியும். பிறகு ஒருநாள் இன்னொருவர் உங்களிடமிருந்து திருடிக் கொள்வார்... அது எனக்கு மகிழ்ச்சியைத் தந்ததற்குக் காரணம், அது என்னை மரணமில்லாதவனாக ஆக்குகிறது என்பதுதான். இன்னும் 200 ஆண்டுகள் கழித்து மக்களின் நடவடிக்கைகளில் ஏதோ ஒருவகையில் நானும் கலந்திருப்பேன் என்பதை இதன்மூலம் நான் அறிகிறேன்.

**– பால்ஸாக்**

தனக்கென்று வரும்போது இந்த மனம் எப்படித் தலை கீழாய்த் திரும்புகிறது. ஒவ்வொரு விஷயத்திலும்!

**– ஆதவன்**

பத்திரிகை ஒரு பெரிய சக்தி. ஆனால், கரையில்லா நீர் பிரவாகம், எவ்விதம் கிராமப் புறங்களை எல்லாம் மூழ்கடித்து, பயிர்களையும் நாசமாக்கி விடுமோ, அதேபோல, கட்டுத் திட்டத்திற்கு உட்படாத பேனாவும், நாச வேலைக்குத் தான் பயன்படும். கட்டுத் திட்டம் வெளியிலிருந்தே வருவதாயிருந்தால், கட்டுத் திட்ட மில்லாததைவிட, அது, அதிக விஷமானதாகும்.

கட்டுத் திட்டம் உள்ளுக்குள் இருந்தே வருவதாக இருந்தால் தான் லாபம் உண்டு. இந்த நியாயம் சரியானது என்றால், உலகில் இப்பொழுது இருக்கும் பத்திரிகைகளில் எத்தனை இந்த சோதனையில் தேறும்? பயனில்லாதவைகளாக இருப்பவைகளை யார் நிறுத்துவர்?

பொதுவாக, நல்லதையும், தீயதையும் போல, பயனுள்ளவையும், பயனில்லாதவையும் கலந்து இருந்து கொண்டு தான் வரும். மனிதனே அதில் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்!’ **– காந்தி (சுய சரிதையில்)**

என் இலட்சிய வெகுஜன பத்திரிகை இப்படித்தான் இருக்கும் : வெகுஜனங்களின் விருப்பத்தில், புழக்கத்தில் இருக்கும் எல்லாவற்றைப் பற்றியும் அக்கறை காட்டவேண்டும். ஆனால் அவற்றையெல்லாம் அங்கீகரிக்கவேண்டிய பொதுப் புத்தி சிக்கலில் சிக்கக்கூடாது. பொதுப் புத்தியின் சிக்கலை பொதுப்புத்திக்கே எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுடைய அக்கறைக்கு வராத ஆனால் வரவேண்டியவற்றை அடையாளம் காட்டவேண்டும். ஆனால் ஒரு சில வருட வாசிப்புப் பழக்கம் மட்டுமே உள்ள எவருக்கும் எதையும் புரியச் செய்யவைக்கும் மொழி இருக்கவேண்டும். விஷயங்களைக் கொண்டாடவேண்டும்; நபர்களை அல்ல. விஷயங்களை விமர்சிக்க வேண்டும்; நபர்களை அல்ல. வாசகரை ப்ளஷர் காரில் வழ வழ சாலையில் அழைத்துப் போவதல்ல வெகுஜன இதழின் வேலை. வாசகரோடு கை கோர்த்து கரடு முரடான சாலையில் அதன் சுமை தெரியாமல் சம்பாஷித்தபடி உற்சாகமாக கடினமான இலக்குகள் நோக்கி கூட்டுப் பயணம் அழைத்துச் செல்வதுதான் வெகுஜன இதழின் வேலை. – ஞாநி

# சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கு; வன்னி யுத்த இரகசியங்கள் கசியுமா?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கு இம்முறை மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ளது.

கொழும்பின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரையில் இந்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்த மநாட்டில் கலந்து கொள்ளுமாறு 62 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 44 நாடுகளுக்கு கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு முதல் சுயாதீன புத்திஜீவிகள் கருத்தரங்கில் உரையாற்ற சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பல் வேறுதுறைகள் தொடர்பில் இந்த கருத்தரங்கில் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தில் தமிழர்கள் தொடர்ந்தும் இணைக்கப்படுவர்

## இராணுவத்தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

அதிகளவான தமிழர்கள் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். தகுதிகளின் அடிப்படையில் அதிகளவான தமிழர்கள் எதிர்காலத்தில் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களை இராணுவத்தில் இணைப்பது குறித்து கவனம் செலுத்துமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சில தமிழ் பிரிகேடியர்கள் கடமையாற்றி வருவதாகவும் தமிழர்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பில் எவ்வித தடையும் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் பார்வைக்கு

(கொழும்பு)

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் 31ஆம் திகதி வெளியிடப் போவதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறுவதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் யாப்பின் அடிப்படையில் சொத்துக்கள் தொடர்பான பிரகடனங்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்த அரசியல் கட்சிகளின் பெயர் பட்டியலை எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப் போவதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் செயலாளர்களினால் இது தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக எதிர்வரும் 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கும் படி கோரிக்கை விடப்பட்டது. இதனை முன்னிட்டு இவ்வாறு கால அவகாசம் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேவையான தகவல்களை வழங்காத அரசியல் கட்சிகளின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படவுள்ளது. இலங்கையில் இதுவரை 64 அரசியல் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

# வவுனியா நெல் வயல்களை புதிய களை ஆக்கிரமிக்கிறது

## விவசாயிகளுக்கு தலையிடி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் களை நெல்லின் தாக்கம் ஏற்பட்டுள்ளமையினால் விவசாயிகள் அது தொடர்பில் பூரண கவனம் செலுத்த வேண்டும் என விவசாய திணைக்களத்தின் விரிவாக்கற்பிரிவு பாடவிதான உத்தியோகத்தர் தர்மதேவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீடி ரைஸ் எனப்படுகின்ற களை நெல்லின் தாக்கம் இனம் காணப்பட்டுள்ளது. இது நெற்செய்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில் தற்போது உள்ளது. இக்களையானது நெற்செய்கை செய்யப்படும் பிரதேசங்களில் காணப்படும். முதன் முதலாக 1970ஆம் ஆண்டு இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் இந்த இனம் காணப்பட்டது.

இதற்கு பின்னர் இது ரஷ்யா, தென் அமெரிக்க பிராந்தியத்தில் காணப்பட்டுள்ளது. இக்களையானது நாம் செய்கை மேற்கொள்ளும் இனத்திற்கும் இயற்கையாகவே வரும் இனத்திற்கும் தானாக இடம்பெறும் கலப்பினால் உருவாகி வளரும் ஓர் புதிய இனமே இதுவாகும்.

இதனை விவசாயிகள் அடையாளம் காணுவது மிகவும் கடினமானது. ஏனெனில் நாம் பொதுவாக செய்கை பண்ணும் இனத்தோடு ஒத்து காணப்படும். இப் பயிரில் இருந்து கதிர் வெளிவரும் வரைக்கும் ஒரே மாதிரியான குணவியல்பை கொண்டிருக்கும். எனவே கதிர் வந்த பின்னரே இனம்காண முடியும்.

இது நாம் சாதாரணமாக பயிர் செய்யும் இனத்திற்கு முன்னராகவே கதிர்வந்து முதிர்ந்து விடும். இது சிவப்பு நிறமாக காணப்படும். இக்களை நெல்லினை நாம் கைகளினால் வெட்டியே அகற்ற வேண்டும். இக் களை காணப்படும் நெல்லினை விதை நெல்லாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இந்த இரண்டு முறையையும் நாம் பின்பற்றி வந்தால் எதிர்காலத்தில் இந்த களை நெல்லின் தாக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த இரண்டு வருடங்களாகவே இனம் காணப்பட்டு வருகின்றது. குறிப்பாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் விதை நெல்லினை அம்பாறை மாவட்டத்தில் இருந்து பெற்றுக்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதன் காரணமாகவே இத்தாக்கம் வவுனியா மாவட்டத்திற்கும் வந்துள்ளதாக நாம் அடையாளம் கண்டுள்ளோம் என்றார்.

# இலங்கை தொழிலாளிக்கு டோகாவில் மரணதண்டனை

## ஜனாதிபதியிடம் கருணைமனு

(கொழும்பு)

டோகா - கட்டாரில் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள இலங்கையர் ஒருவரை காப்பாற்றுமாறு ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இரண்டாம் தடவையாக ஆணையகம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

கொலைக் குற்றம் ஒன்று தொடர்பில் வெங்கடாசலம் சுதேஸ்கர் என்ற இலங்கையருக்கு கட்டார் நீதி மன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்தநிலையில் அவருக்கு எந்தநேரத்திலும் தண்டனை நிறைவேற்றப்படலாம்.

இதனிடையே, கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினர், குற்றம் சுமத்தப்பட்டவரிடம் இருந்து நஷ்டஈடாக 3 இலட்சத்து 50000 ரூபாவை கோரியுள்ளனர்.

இந்தப்பணம் செலுத்தப்பட்டால் குறித்த இலங்கையரைக் காப்பாற்ற முடியும்.

எனினும் இந்த விடயம் தொடர்பாக அவரின் குடும்பத்தினர் ஜனாதிபதிக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் கருணை மனு சமர்ப்பித்த போதும் எவ்வித நடவடிக்கையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை இந்த நிலையிலேயே இரண்டாவது தடவையாகவும் தாம் கடிதம் எழுதுவதாக ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

# கப்பம் கோரும் கும்பல் தலையெடுக்கிறது கொழும்பில்

(கொழும்பு)

பாதுகாப்புத்துறையினர் என தெரிவித்து சிலர் அநாமதேய தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு தமிழ் வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்களிடம் இருந்து கப்பம் கோருவதாக முறையிடப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை மற்றும் வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களிடம் தொலைபேசியின் ஊடாக கப்பம் கோரப்படுவதாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

# தேயிலைத் தோட்டங்களை சீனக்கம்பனிகள் தத்தெடுப்பு

(கொழும்பு)

சீனர்களுக்கான சிறப்புத் தேயிலையை, சீனாவே இலங்கையில் உற்பத்தி செய்து கொள்ளவுள்ளது. இலங்கையுடன் இணைந்து கூட்டுமுயற்சியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு இலங்கை முதலீட்டுச்சபை அனுமதி அளித்துள் ளது.

எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, சீனாவின் யுன்னான் டியன் பொங் குழுமத்தைச் சேர்ந்த யென்பொங் அனைத்துலக நிறுவனம் இந்த சிறப்புத் தேயி லையை உற்பத்தி செய்யவுள்ளது.

இந்த கூட்டுமுயற்சி நிறுவனம், உயர்தரம் வாய்ந்த சீன சிறப்புத் தேயிலையை உற்பத்தி செய்து, சீன சந்தைக்கு அவற்றை ஏற்றுமதி செய்யவுள்ளது.

சீன சிறப்புத் தேயிலை, எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் மலையகத் தோட்டங்களில் பயிரிடப்படவுள்ளது.

இந்தக் கூட்டுமுயற்சி, இலங்கைக்கு கூடுதல், வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதாகவும், சீன சந்தைக்கு கூடுதல் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# முப்படைகள் மீதும் பூரண நம்பிக்கை உண்டு



நாட்டின் முப்படைகளிலும் மக்களுக்கு பூரண நம்பிக்கை உள்ளது. இதனால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை பொலிஸார் திருப்திகரமாக செய்யவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் தான் இராணுவ சேவையில் இருந்த காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே அதிக காலம் கடமை யாற்றியதாகவும் அப்போது இடம்பெற்ற அனைத்து திட்டங்களிலும் பங்கு கொண்டதாகவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சிறு வயதிலேயே இராணுவத்தில் இணைந்து 20 வருடங்கள் சேவையாற்றியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் இருந்து விடுமுறைக்கு தான் கொழும்பு வரும்போதெல்லாம் அனைவரும் 'ஐயோ அப்பா' என தன்னை பார்த்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அன்று மக்களிடம் நம்பிக்கை ஒன்று காணப்படவில்லை என பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் பற்றி பேசினால் முப்படைகள் பற்றி மக்கள் இன்று பேசுவதாகவும் அந்த நிலை இன்று பொலிஸாருக்கும் ஏற்பட்டுள்ளதென அவர் கூறினார். யுத்தம் நிறைவடைந்து சட்டவிரோத செயல்கள் ஒழிக்கப்பட்டு அவசரகால சட்டம் நீக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பூரண பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளதென பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய பாதுகாப்பு செயலாளர் இக்கருத்துகளை தெரிவித்தார்.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விஷேட செயற்றிட்டம்



ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)


நேற்றைய தொடர்ச்சி...

9) தாவரங்களில் ஆவியுயிர்ப்பு நிகழும் பகுதிகள் எவை?

10) தாவரங்களில் பரவல், பிரசாரணம், உயிர்ப்பான அகத்துறிஞ்சல் நடைபெறும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தருக.

03)

a)




ஒரே மாதிரியான சட்டித் தாவரங்களை தேர்ந்தெடுத்து ஒன்றினை இலையுடனும் மற்றையதை இலைகளை அகற்றிய பின்னரும் பொலித்தீன் பையினால் மூடிக்கட்டி நன்கு சூரிய ஒளி படும் இடத்தில் வைத்து இரண்டு மணித் தியாலங்களின் பின்னர் அவதானிக்கப் பட்டது.

1) இப்பரிசோதனையின் நோக்கம் யாது?


2) A,B இல் உமது அவதானம் யாது?

3) A இலுள்ள பொருளை எவ்வாறு உறுதி செய்வீர்?

4) இவ் அமைப்பை ஒழுங்குசெய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைத் தருக.

5) இப்பரிசோதனையின் எடுகோள் யாது? கருதுகோள் யாது?

b)



1) இப்பரிசோதனையின் நோக்கம் யாது?

2) அவதானத்திற்கான காரணத்தை தருக.

3) இச்செயற்பாடு தாவரங்களில் பயன்படும் சந்தர்ப்பத்தைத் தருக.

04) பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| தாவரம் | ஆவியுயிர்ப்பை குறைப்பதற்கான இசைவாக்கம் | இத்தாவரத்தை ஒத்த வேறு தாவரங்கள் |
|---|---|---|
| திருக்கள்ளி | | |
| சவுக்கு | | |
| ஆல் | | |
| அலரி | | |
| தேமா | | |
| அடம்பன் | | |
| இராவணன் மீசை | | |
| எருக்கலை | | |
| மொசுமொசுக்கை | | |
| நாகதாளி | | |

### ஒளித்தொகுப்பு

01) கீறிட்ட இடங்களை நிரப்புக.

1) தற்போசணி : தமக்குத் தேவையான .................... தாமே .................... கொள்ளும் தாவரங்கள் .................... எனப்படும்.

2) பிறபோசணி : தமது .................... தேவைகளுக்கான .................... தங்கியுள்ள அங்கிகள் .................... எனப்படும்.

3) ஒளித்தொகுப்பு : பச்சையம் அடங்கியுள்ள தாவரங்கள் .................... யை பெற்று மூலப்பொருள்களாக ...................., .................... ஆகியவற்றைப் பயன்படுத்தி .................... தொகுக்கும் செயற்பாடு .................... என அழைக்கப்படும்.

(மாப்பொருள், உணவை, உணவுத், தொகுத்துக், பிறபோசணி, தற்போசணி, ஒளித்தொகுப்பு, நீர், சூரிய ஒளி, காபனீரொட்சைட்டு, பிற அங்கிகளில்)

02. சுருக்கமான விடை தருக

1) தாவரங்களிலிருந்து நாம் பெறும் முக்கிய போசனைக்கூறுகள் எவை?

2) காபோவைதரேற்றில் அடங்கிய இரு பிரிவுகளும் எவை?

3) ஒளித்தொகுப்பிற்கான

1) அகக்காரணிகள் 2) புறக் காரணிகள் எவை?

4) மாப்பொருளில் காணப்படும் மூலகங்கள் எவை?

5) மாப்பொருளில் இனம் காண உதவும் இரசாயனப் பதார்த்தம் யாது?

6) ஒளித்தொகுப்பிற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் ஒளியின் நிறங்கள் எவை?


7) ஒளித்தொகுப்பின் பக்கவிளைபொருள்கள் எவை?

8) ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்கான சொற் சமன்பாட்டைத் தருக.

9) ஒளித்தொகுப்பிற்குத் தேவையான சூரிய ஒளியைப் பெற்றுக்கொள் வதற்காக இலைகள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 3 தருக.

10) கீழ்வரும் இலையின் பகுதிகளின் தொழில்களைத் தருக.

1) இலைவாய் 2) இலை நரம்புகள்




படத்தில் காட்டியவாறு ஒரு சட்டித் தாவரத்தின் இரு இலைகளில் தனித்தனியாக நீர் KOH கரைசல் சம அளவில் பொலித்தீன் பைகளில் விடப்பட்டு கட்டியபின் சூரிய ஒளியில் வைக்கப்பட்டது.

a) மேற்படி பரிசோதனையின் நோக்கம் யாது?

b) இங்கு KOH பயன்படுத்துவதற்கான காரணம் யாது?

c) இப்பரிசோதனை மூலம் நீர் விளங்கிக்கொள்வது என்ன?

d) இலையின் மாப்பொருள் உண்டென்பதை சோதித்தறிவதற்கான படிமுறைகளைத் தருக.

| இலையின் பாகங்களின் இசைவாக்கங்கள் | தொழில்கள் |
|---|---|
| 1) கடற்பஞ்சுக் கலத்தில் கலத்திடை வெளிகள் காணப்படுதல். | |
| 2) மேற்றோலில் பச்சையம் அடங்கியிராமை | |
| 3) காவற்கலங்களில் பச்சையம் காணப்படல். | |
| 4) பெருமளவிலான இலைவாய்கள் காணப்படல் | |
| 5) மேற்புற மேற்றோலுக்கு அணித்ததாக வேலிக் காற்புடைக்கல விழையம் அமைந்திருத்தல். | |

### பூக்குந் தாவரங்களில் இனப்பெருக்கம்

1) தாரவரங்கள் தமது இனத்தைப் பெருக்குவதற்கு இலிங்கமுறையிலும் இலிங்கமில் முறையிலும் இனப்பெருக்கம் செய்கின்றன.

1. இனப்பெருக்கம் என்றால் என்ன?

2. பதியமுறை இனப்பெருக்கம் என்பதிலிருந்து நீர் அறிந்துகொள்வது என்ன?

3. செயற்கையான பதியமுறை இனப்பெருக்கத்தின் வகைகளைத் தருக?

4. பதிவைத்தலின் வகைகள் எவை? இவற்றுள் ஏதாவது ஒரு வகையின் படிமுறைகளைத் தருக.

5. இழையவளர்ப்பு என்றால் என்ன?

6. இழைய வளர்ப்பின் அனுகூலங்கள், பிரதிகூலங்களைத் தருக.

7. ஒட்டுதலின்போது பின்வரும் விடயங்களில் கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சங்கள் எவை?
1) ஒட்டுக்கிளை தெரிவு செய்தல்
2) ஒட்டுக்கட்டை தெரிவு செய்தல்
3) ஒட்டுதல்.

8. இயற்கையான பதியமுறை இனப்பெருக்கத்திற்கும் செயற்கையான பதியமுறை இனப்பெருக்கத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

9. அயன் மகரந்தச்சேர்க்கை என்றால் என்ன?

10. பூக்குந் தாவரங்களில் கருக்கட்டல் நிகழும் இடம் எது?

11. கருக்கட்டல் என்றால் என்ன?

12. பூச்சியினால் மகரந்தச் சேர்க்கை அடையும் பூக்களில் காணப்படும் இசைவாக்கங்களை உதாரணங்களுடன் தருக.

13. தன் மகரந்தச் சேர்க்கையை தவிர்த்து அயன் மகரந்தச் சேர்க்கைக்காக பூக்களில் காணப்படும் இசைவாக்கங்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

14. வித்து பரம்பலடைய உதவும் காரணிகள் எவை?

15. வித்துக்கள் பரம்பலடைய வேண்டியதன் முக்கியத்துவத்தை தருக.

16. விவசாய நடவடிக்கைகளின்போது முளைக்கும் திறன் கொண்ட வித்துக்களைத் தெரிவு செய்யப்படும் முறைகளைக் குறிப்பிடுக.

17. பின்வருவனவற்றை விளக்குக.
1) ஓரிலிங்கப் பூ 2) ஈரிலிங்கப் பூ
3) ஓரில்லத் தாவரம் 4) ஈரில்லத் தாவரம்

பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க

| வித்து/கனி | பரம்பலை ஏற்படுத்தும் காரணி | இசைவாக்கம் |
|---|---|---|
| மலைவேம்பு | | |
| தாமரை | | |
| கடல் மாங்காய் | | |
| பருத்தி | | |
| ஆடையொட்டி | | |
| புலிநகம் | | |
| மாம்பழம் | | |
| எலுமிச்சை | | |
| பொன்னொச்சி | | |
| தேங்காய் | | |

பின்வரும் பதியப்பகுதிகள் மூலம் இனம்பெருக்கும் தாவரங்கள் தருக.

| பதியப்பகுதி | தாவரம் |
|---|---|
| முதிர்ந்த தண்டு | |
| இளந்தண்டு | |
| நிலக்கீழ்த்தண்டு | |
| a) தண்டுக்கிழங்கு | |
| b) வேர்த்தண்டுக் கிழங்கு | |
| c) தண்டுக் குமிழ் | |
| d) தண்டு முகிழ் | |
| ஒடி | |
| படரி | |
| குறுங்கிடை | |
| உறிஞ்சி | |
| முடி | |
| வேர் | |
| இலை | |

1. தூய்மையற்ற பதார்த்தங்களில் இருந்து தூய பதார்த்தங்களை வேறாக்கும் முறைகள் எவை?

2. தூய பதார்த்தத்திற்கும் தூய்மையற்ற பதார்த்தத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்

| தூய பதார்த்தம் | தூய்மையற்ற பதார்த்தம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5 | |

3. தூய நீரின் கொதிநிலை ____________
பனிக்கட்டியின் உருகுநிலை ____________
தூய நப்தலினின் உருகுநிலை ____________
கந்தகத்தின் உருகுநிலை ____________

4. திண்மம் திரவமாக மாறும் மாறா வெப்பநிலை அப்பதார்த்தத்தின் .................. ஆகும்.
திரவம் திண்ம நிலைமை அடையும் மாறா வெப்பநிலை அதன் .................. ஆகும்.

5. **இணைக்க**

| | |
|---|---|
| கொண்டிசு | கறுப்பு |
| நீரற்ற $CuSO_4$ | நீலம் |
| கந்தகம் | வெள்ளை |
| நீரேறிய $CuSO_4$ | கடும் ஊதா |
| மங்கனீச்ரொட்சைட்டு | மஞ்சள் |

6. மூலகங்களுக்கும் சேர்வைகளுக்குமிடையிலான வேறுபாடுகள்

| மூலகங்கள் | சேர்வைகள் |
|---|---|
| வளியில் சூடாக்கும்போது நிறை அதிகரிப்பை காட்டும் | ____________ |
| ____________ | சில சேர்வைகள் வெப்பமேற்றி பிரிகையடையச் செய்யலாம். |
| ஒரேயொரு பதார்த்தம் கொண்டது | ____________ |

7. வேறுபட்ட பண்புகளைக் கொண்ட ..................... இரசாயன முறையில் பிரிக்கமுடியாத பதார்த்தமே ..................... ஆகும்.

உதாரணம் : மக்னீசியம் ..................... , ..................... . .....................
இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மூலகங்கள் ..................... . ..................... , ..................... சேர்வையாகும்.

உதாரணம் : பொற்றாசியம் பரமங்கனேற்று ..................... . ..................... , .....................

இணைக்க

| | |
|---|---|
| Al | கல்சியம் |
| Hg | ஆகன் |
| Ca | காபன் |
| Ar | அலுமினியம் |
| C | இரசம் |

8. மூலக ஆக்க அலகு அணுவாகும்.
அணுவில் ..............., ..................... , .....................
துணிக்கைகள் உண்டு.
இத் துணிக்கைகளில் ..................... இலேசானது.
அணுக்கருவில் அமைந்துள்ள ..................... ஏற்றமுள்ள துணிக்கைள் ..................... அணுக்கருவில் அமைந்துள்ள ..................... துணிக்கை

9. அணுவினது ஒவ்வொரு சக்திமட்டத்திலும் நிரம்பக்கூடிய ஆகக்கூடிய இலத்திரன்கள் எண்ணிக்கை முறையே 1ஆம் சக்தி மட்டம் ..................... 2ஆம் சக்தி மட்டம் ..................... 3 ஆம் சக்தி மட்டம் .....................

10. அணுவெண் என்றால் கருவில் அடங்கியுள்ள ..................... திணிவெண் என்பது ஓர் அணுவின் கருவில் அடங்கியுள்ள ..................... . ..................... , ..................... , ..................... அகும்.

11. $^{27}_{13}Al$, $^{39}_{19}K$, $^{40}_{20}Ca$

a) அணுவெண்கள் யாது?

b) ஒவ்வொன்றிலும் அடங்கியுள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை யாது?

c) இலத்திரன்களின் எண்ணிக்கை யாது?

d) நியூத்திரன்களின் எண்ணிக்கை யாது?

12. நேர் அயன்களுக்கும், எதிரயன்களுக்கும் இடையே ஏற்படும் கவர்ச்சி காரணமாக ஏற்படும் பிணைப்பு அயன் பிணைப்பு எனப்படும்.

1) சோடியம் அணுவில் இருந்து அயன் உருவாவதைக் காட்டும் படத்தை வரைக.

# 64ஆவது குடியரசு தின கொண்டாட்டம்

# இந்தியா முழுவதும் கோலாகலம்



இந்தியாவின் 64ஆவது குடியரசு தின கொண்டாட்டம் இந்தியா முழுவதும் கோலாகலமாக நேற்று நடைபெற்றது.

தலைநகர் புதுடில்லி, சென்னை, மும்பை உள்ளிட்ட அனைத்து மாநில, மாவட்டம் முழுவதும் விழாவில் மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

டில்லி ராஜ்பாத்தில் ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி தேசிய கொடியேற்றி வைத்தார்.

குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பூட்டான் மன்னர் ஜிக்மி கேசார் வாங்சக் பங்கேற்றார். இவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

டில்லியில் காலை 9.30 மணியளவில் தொடங்கிய விழாவில் முதலில் இந்தியா கேட் பகுதியில் உள்ள அமர்ஜவான் ஜோதியில் பிரதமர் மன்மோகன்சிங், இராணுவ தளபதி பிக்ராம்சிங், பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி, உள்ளிட்டோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இந்நேரத்தில் இராணுவ வீரர்களின் பைப் இசை விண்ணை தொட்டது.


குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னை மெரீனா கடற்கரையில் நடந்த விழாவில் கவர்னர் ரோசையா தேசிய கொடியேற்றி வைத்தார். விழாவில் முதல்வர் ஜெயலலிதா பங்கேற்றார்.

தொடர்ந்து முப்படை வீரர்களின் அணிவகுப்பை கவர்னர் ஏற்றுக்கொண்டார். இதனை தொடர்ந்து அரசின் சாதனையை விளக்கும் அணிவகுப்பு, மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வீர தீர செயல்கள் புரிந்தவர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றுகளை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்.

மாணவ, மாணவிகள் உள்பட இலட்சக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். விழாவையொட்டி பலத்த பாதுகாப்பு பணிகள் செய்யப்பட்டிருந்தன.




## ஜெயலலிதாவின் ஆட்சி மோசம் குற்றஞ்சாட்டுகிறார் விஜயகாந்த்

தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி மோசம் என விஜயகாந்த் குற்றஞ்சாட்டியுள்ளார். அ.தி.மு.க.வுடனான பிளவிற்கு பின், தே.மு.தி.கவின் 8ஆவது பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் 16 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும், காவிரி நீரை தமிழக விவசாயிகளுக்கு போராடிப் பெறாத தமிழக அரசைக் கண்டித்தும், தமிழகத்தில் நிலவும் மின் வெட்டுக்கு கண்டனம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்திற்கு பின் பேசிய அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் தே.மு.தி.க.கட்சியை அ.தி.மு.க - தி.மு.க கட்சிகள் அரசியல் ஆதாயத்திற்காக தங்கள் பக்கம் இழுப்பதற்கு முயற்சி செய்கின்றன.

ஆனால் எந்த ஒரு சூழ்நிலையிலும் தெய்வத்துடனும்-மக்களுடனும் தனது கூட்டணி என்று தெரிவித்தார்.மேலும், மத்திய அரசு விவகாரத்தில் தமிழக முதல்வர் முன்னுக்குப் பின் முரணாக பேசுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.தேர்தல் நேரத்தில் தமிழக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றவில்லை. தமிழகத்தில் மோசமான ஆட்சி நடந்து வருகிறது. இதனை எதிர்கொள்ள மக்கள் புரட்சி வர வேண்டும் என விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கிறிஸ்தவ நற்சிந்தனை

### மற்றவர்களின் முகத்தில் என்னத்தைக் காணுகின்றோம்

தொடக்க நூல் 33:1-11

யாக்கோபும் ஏசாவும் நீண்ட பகைவர்கள் ஆவர். இந்தச் சம்பவத்தில் யாக்கோபின் அணுகுமுறை பயமும் சந்தேகமும் கொண்ட அணுகுமுறை ஆகும்.

ஏசாவின் அணுகுமுறையோ சகோதரத்துவ அன்புறவான அணுகுமுறை. அவன் திறந்த மனதுடன் வருகின்றான், காலம் ஏற்படுத்திய பழைய நினைவுகள் குணமடைந்த நிலையில் வருகின்றான். ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையோடு வருகின்றான். புதிய ஆரம்பத்திற்கும் புதிய உறவிற்குத் தயாராகி அவன் வருகின்றான்.

இந்தப்பகுதியில் வருகின்ற இணைச்சொற்கள், அந்தக் காட்சியின் அழகை நமக்கு விபரிக்கின்றது. ஏசா ஓடினான், கட்டித்தழுவினான். யாக்கோபின் கழுத்தைச் சுற்றி தன்கரத்தை அன்பு தழுவ போடுகின்றான். முத்தமிடுகின்றான் இவை எல்லாமே ஒப்புரவாகுதலின் ஒப்பற்ற அடையாளங்கள்.

இந்தக் காட்சியை மற்றும் ஒரு புதிய ஏற்பாட்டுக் காட்சியை நமக்கு நினைவுபடுத்துகின்றது. (லூக்கா 15:11-32) ஏசா காணாமற்போன மகன் உவமையில் வரும் தந்தையை நமக்கு ஞாபகப்படுத்துகின்றான்.

மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தினர் (தொடக்க நூல் 33:4) அவர்களின் கண்ணீர் மனந்திரும்புதலின் கண்ணீர். ஆனந்தக் கண்ணீர். இந்தக் காட்சிபோல் மற்றுமொரு காட்சி எமக்கு ஞாபகம் ஊட்டுகின்றது. யோசேப்பும் அவனது பதின்னொரு சகோதரங்களும் ஒப்புவாகிய அந்த அற்புதக் காட்சியை நாம் மறந்துவிட முடியாது (தொடக்க நூல் 45)

"உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பது போல் இருக்கிறது" (தொடக்கநூல் 33:10)

இது ஓர் அற்புதமான அழகான கூற்று. இந்தக் கூற்றுக்கு முன்னர் யாக்கோபு ஏசாவின் முகத்தில் பகைவனின் முகத்தையே பார்க்கின்றான். இப்போது கடவுளின் முகத்தப் பார்க்கின்றான். மன்னிக்கும் ஏசாவின் முகத்தில் யாக்கோபு மன்னிக்கும் கடவுளின் முகத்தை பார்க்கின்றான்.

இந்தக் கதைக்கும் திருச்சபை ஒன்றிப்புக்கும் என்ன சம்பந்தம்

நமது திருச்சபைகளுக்கு இடையில் ஒரு நீண்ட பகை வரலாறு இல்லையா? தமது அணுகுமுறையில் எவருடைய அணுகுமுறையைக் கையாளுகின்றோம். அது யாக்கோபினுடையதா? ஏசாவினுடையதா?

எமது சகோதர சபைகளில் நம்மால் கடவுளின் முகத்தை காணமுடிகின்றதா? ஒப்புரவாக்குதல் என்ற அற்புதக்காட்சி நம்மிடையே இடம் பெறுமா? அந்த ஒரே திருமேசையை நாம் பகிர்வோமா அல்லது பகிர மறுக்கும் மூத்தமகன் போல் நாம் இருப்போமா?

எனவே, நாம் மனந்திரும்புதலுக்காய் மன்றாடுவோம். மனமாற்றத்திற்காய் மன்றாடுவோம். எங்கள் மனப்பாங்கு மாற வேண்டும் என்பதற்காய் மன்றாடுவோம். நம்மிடையே ஒன்றுமை மலர மன்றாடுவோம்.

ஆண்டவரே! சந்தேகத்தின் ஆவியை சகிப்பின்மை என்ற ஆவியை, கண்டன ஆவியை எம்மிடம் இருந்து எடுத்துப்போகும் நாம் சபைகளாக திருச்சபைகளாக ஒருவரை ஒருவர் நெருங்கிவர, ஒருவரை ஒருவர் மதிக்க ஒருவரை ஒருவர் கட்டித்தழுவ எமக்கு அருள் புரியும். ஆமென்.

வி.பி.தனேந்திரா.

## பத்ம பூஷண் விருதை புறக்கணித்தார் திரைப்பட பின்னணிப்பாடகி ஜானகி

பத்ம விருதுகள் வழங்கப்படுவதில் தென்னிந்தியர்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி தனக்கு வழங்கப்பட்ட பத்ம பூஷண் விருதை பிரபல பின்னணி பாடகி எஸ். ஜானகி புறக்கணித்துள்ளார்.

கலை, சமூகப் பணி, அறிவியல் மற்றும் பொறியியல், வர்த்தகம் மற்றும் தொழில், மருத்துவம், இலக்கியம், கல்வி, விளையாட்டு, சிவில் சர்வீஸ் போன்ற பிரிவுகளில், சிறப்பான சாதனை புரிந்தவர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினத்தையொட்டி பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டுக்கான விருதுகள் பெறுவோர், பெயர் விபரம் நேற்று வெளியிடப்பட்டது.

மொத்தம், 108 பேர் பத்ம விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் நான்கு பேர் பத்ம விபூஷண் விருதுக்கும், 24 பேர் பத்ம பூஷண் விருதுக்கும் 80 பேர் பத்மஸ்ரீ விருதுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நடிகை ஸ்ரீதேவி, ஈரோட்டைச் சேர்ந்த தொழி லதிபர் எஸ்.கே.எம்.மயிலானந்தன், லட்சுமி நாராயண சத்திய ராஜு, ராஜ் ஸ்ரீபதி, டாக்டர்.டி.வி. தேவராஜன் மற்றும் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற துப்பாக்கி சுடும் வீரர் விஜய்குமார், மல்யுத்த வீரர் யோகேஷ்வர்தத் உட்பட 80 பேர் பத்மஸ்ரீ விருதுக்கு தெரிவாகியுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த, திரைப்பட பின்னணி பாடகி எஸ்.ஜானகி, ராமமூர்த்தி தியாகராஜன் மற்றும் கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட், குத்துச் சண்டை வீராங்கனை மேரிகோம், நடிகை சர்மிளா தாகூர், மறைந்த இந்தி திரைப்பட நடிகர் ராஜேஷ் கன்னா உட்பட 24 பேர், பத்ம பூஷண் விருதுக்கு தெரிவாகியுள்ளனர். இதில் பிரபல பின்னணி பாடகி எஸ். ஜானகிக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



இந்நிலையில் இதுகுறித்து கருத்து தெரிவித்த ஜானகி, பத்ம விருதுகள் வழங்கப்படுவதில் வட இந்தியர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதும் தென்னிந்தியர்கள் புறக்கணிக்கப்படுவதும் தமக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் தான் மிகவும் ஏமாற்றமடைந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் தனக்கு வழங்கப்பட்ட பத்ம பூஷண் விருதை புறக்கணிப்பதாகவும் ஜானகி தெரிவித்துள்ளார்.

74 வயதான எஸ். ஜானகி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெரும்பான்மை உள்ளது

எனக்கு பெரும்பான்மை எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு உள்ளது. அதனால், சட்டசபையில், பெரும்பான்மையை நிரூபிக்கும்படி, என்னிடம் கவர்னர் பரத்வாஜ் கேட்கவில்லை என கர்நாடக பா.ஜ.முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் கூறினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தை மீறி
# மியான்மர் இராணுவத்தில் சிறுவர்கள்



உலகம் முழுவதும் ஆயுதம் தாங்கி போராடும் போராளிக் குழுக்கள் மட்டுமின்றி, பல்வேறு நாடுகளின் இராணுவத்திலும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சேர்க கப்பட்டு ஆயுதப் பயிற்சி அளிக் கப்படுகின்றன.இதனை தடுக்க ஐ.நா. பல்வேறு நடவடிக்கை களை எடுத்து வருகிறது.

இது குறித்து ஐ.நா. நடத்திய ஆய்வில், மியான்மர் உள்ளிட்ட 24 நாடுகளில் சர்வதேச குழந் தைகள் உரிமைச் சட்டத்தை மீறி குழந்தைகளை ஆயுத மோதல் களுக்கு பயன்படுத்தியது தெரிய வந்தது.இதையடுத்து கடந்த யூன் மாதம் ஐ.நா. முயற்சியால் ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் சிறுவர்களுக்கான பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒப் பந்தம் கையெழுத்திடப்பட்டது.

அதன்பின்னர் சிறுவர்களை இராணுவத்திற்கு எடுக்கும் ஆட் சேர்ப்பு அறிக்கைகள் குறைந் துள்ளன. மியான்மர் இராணு வத்தில் இருந்து 42 சிறுவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் தற்போது ஒப்பந்தத்தை மீறி மியான்மரில் குழந்தைகளை ஆயுதப்படையில் சேர்த்து வரு வதாக மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தெயின் செயின் தலைமையி லான மியான்மர் அரசு, ஐ.நா. வுடன் இணைந்து கூட்டு நட வடிக்கை திட்டத்தில் கையெழுத் திட்டு, ஜனநாயக சீர்திருத் தத்தை விரும்புவதாக தன்னைக் காட்டியுள்ளது.ஆனால், இரா ணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையாக நடக்கிறதா என்பதை கண்காணிக்க அதிகாரிகள் தவ றிவிட்டனர்.கடந்த பத்து ஆண்டு களில் எந்த மாற்றமும் இல்லா மல் ஆட்சேர்ப்பு நடக்கிறது என்று லண்டனைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டி யுள்ளது.

# தீவுப் பிரச்சினையில் தீர்வு; ஜப்பான் சிறப்பு தூதுவர் நம்பிக்கை




எல்லைப் பகுதியில் உள்ள சில தீவுகள் தங்களுக்கு சொந்த மானது என சீனா கூறி வருகி றது. ஆனால் இந்த தீவுகள் தங் களுக்கு உரியவை என ஜப்பான் சொந்தம் கொண்டாடுகிறது. இது தொடர்பாக இரு நாடு களுக்கும் இடையே வெகு கால மாக பிரச்சினை இருந்து வரு கிறது. இரு நாடுகளுக்கு இடையே மோதலும் ஏற்பட்டு வருகின் றன. இந்த நிலையில் சீனாவுக்கு ஜப்பான் தனது சிறப்பு தூதராக நாட்சுவா யமாகுச்சியை அனுப்பி வைத்தது. அவர் சீன அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ஸி ஜின்பிங்கை, பெய்ஜிங்கில் நேற்று சந்தித்து பேசினார். இந்த சந்திப்புக்கு பின்னர் யமாகுச்சி நிருபர்களிடம் பேசும்போது, சீனாவுடனான எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்ப்படும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உள்ளது. இருப் பினும் இந்த விவகாரம் குறித்து நான் சீன அதிபரிடம் நேரடியாக பேசவில்லை என கூறினார்.

# வரிச்சுமை தாங்க முடியவில்லை: கைமாறுகின்றன சொத்துக்கள்



பிரான்சில் ஆண்டுக்கு 1மில் லியன் யூரோவுக்கு மேல் சம் பாதிக்கும் 75 சதவீத பணக்கா ரர்கள் வரி செலுத்த வேண்டும் என்று அரசு தெரிவித்ததும் சிலர் தாங்கள் வேறுநாடுகளில் குடியு ரிமை பெறப் போவாதாக அரசை மிரட்டுகின்றனர். பெனார்டு அர் னால்ட் என்பவர் தனது சொத் துகளை பெல்ஜியத்துக்கு மாற்றி யிருக்கிறார். அங்கு ஒரு அறக் கட்டளை (protectinnest)நிறுவி அதன் நிர்வாகத்தில் தனது pil inuest' என்ற நிறுவனத்தை ஒப் படைத்துள்ளார். 31 சதவிதம் பங்குகளை பெல்ஜியத்தில் தொடங்கியுள்ள புதிய பில் இன்வெஸ்ட் நிறுவனத்துக்கு மாற்றிவிட்டார். பெல்ஜியத்தில் சூப்பர் டாக்ஸ்(75%) எனப்படும் வரிச்சுமை இல்லை. மற்ற வரி களும் பிரான்சை விடக் குறைவு என்பதால் இந்தச் சொத்து மாற் றம் நிகழ்ந்ததா என்று கேள்வி எழுந்துள்ளது.

அனால்டின் தகவல் தொடர் பாளர் இந்த ஏற்பாடுகள், அவர் திடீரென இறந்து விட்டால் என்ன செய்வது என்பதற்காக செய்யப்பட்ட முன்னேற்பாட்டு நடவடிக்கையாகும் என்றார்.

இந்த ஏற்பாட்டால் அவர் 2023 இற்கு முன்பு இறந்தால் அவரது பிள்ளைகளுக்கு இலா பத்தில் பங்குண்டு. ஆனால் எதையும் விற்க இயலாது 2023 க்குப் பின்பு இந்த சொத்துகளை அவர்களுக்கு சொந்தமாகும் என்று விளக்கினார். வாரிசு வரி பெல்ஜியத்தில் 3 % என்றால் பிரான்ஸ் 11% ஆகும். மேலும் பெல்ஜியத்தில் சொத்து வரி கிடையாது என்பதும் ஒரு காரண மாகும். பிரான்ஸ் நீதிமன்றம் சென்ற மாதக் கடைசியில் இந்த சூப்பர் வரியை அநியாயமானது என்று தீர்ப்பளித்ததால் இதைத் திரும்பப் பெற்றுவிடும் என்று சிலர் கூறிவந்தாலும் அதிபர் மாளிகை இதை மறுக்கின்றது..

# மின்னல் தாக்கியதில் விமானம் தரையிறக்கம்




மின்னல் தாக்கியதில் இன்ஜினில் தீப்பிடித் ததனால், பயணிகள் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. துருக்கி நாட்டின் இஸ்தான் புல் நகரிலிருந்து, இஸ்மிர் என்ற நகருக்கு 114 பயணிகளுடன் விமானம் புறப்பட்டது.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருக் கும் போது மின்னல் தாக்கியது.இதில் விமானத்தின் இன்ஜினில் தீப்பிடித்ததையடுத்து இந்த விமானம் அவசரமாக தரையிறக்கப் பட்டது.ஆனால் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. தீப்பற்றிய விமானத்திலிருந்து பயணிகள் உடனடியாக வெளியேற் றப்பட்டனர்.

உலகச் செய்திகள்

# தீவிரவாதிகளிடையே மோதல்; பாகிஸ்தானில் 53 பேர் பலி



(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தானில் வடமேற்கில் ஆப்கானிஸ்தான் எல்லையில் கைபர் மலைப் பகுதி உள்ளது. இங்குள்ள திரா பள்ளத்தாக்கின் பெரும்பாலான கிராமங்கள் தலி பான் மற்றும் அன்சருல் இஸ் லாம் தீவிரவாதிகளின் கட்டுப் பாட்டில் உள்ளன. இங்கு அவர் கள் தீவிரவாத முகாம்களை அமைத்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மைதான் என்ற கிராமம் தலிபான் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளது. இதை கைப்பற்றுவதில் தலிபான் மற் றும் அன்சருல் இஸ்லாம் தீவிர வாதிகளுக்கு இடையே துப் பாக்கி சண்டை நடந்தது. நேற்று முன்தினம் இரவு வரை நடந்த சண்டையில் மொத்தம் 53 பேர் பலியாகினர். அவர்களில் 30பேர் தலிபான் தீவிரவாதிகள். 23 பேர் அன்சருல் இஸ்லாம் அமைப்பை சேர்ந்தவர்கள். இருபிரிவின ருக்கு இடையே நடந்த சண் டையில மைதான் கிராமத்தின் 4 முக்கிய இடங்களை கைப்பற் றியதாக அன்சருல் இஸ்லாம் அமைப்பு தெரிவித்துள்ளது. அங்குள்ள மசூதிகள் மற்றும் பொது இடங்களை தலிபான்கள் ஆக்கிரமித்துள்ளனர். மேலும், மதத்தின் பெயரால் அப்பாவி பொது மக்களை கொன்று குவிக் கின்றனர். எனவே, அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கவே துப்பாக்கி சண்டை நடத்தியதாக வும் கூறினர்.

# வெனிசுலா சிறையில் மோதல்; 50 பேர் உயிரிழப்பு



வெனிசுலாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஊரிபானா சிறையில் நடைபெற்ற மோதலில் 50 பேர் பலியானார்கள் என தகவல் தெரிவிக் கின்றது.சிறைச்சாலைக்குள் சட்டவிரோதமாக ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்து அதிகாரிகள் சோதனை மேற்கொண்டபோது இந்த மோதல் நடைபெற்றுள்ளது என்று கூறப்படுகிறது. மோதலின்போது, துப்பாக்கிச் சூடும் நடைபெற்றுள்ளது. மருத்துவமனை அதிகாரி ரூய் மெடீனா கூறும்போது, இந்தச் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிககின்றன என்றார்.

# பாகிஸ்தான் விமானப்படை திடீர் போர் ஒத்திகை




எல்லையில் பதற்றமான சூழ்நிலை நீடிப் பதன் எதிரொலி யாக, பாகிஸ் தான் விமானப் படை திடீர் போர் ஒத்திகை நடத்தி உள் ளது. பாகிஸ் தான் விமானப் படை சப்ரோன் பண்டிட் என்ற பெயரில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை போர் ஒத்திகை நடத்துவது வழக்கம். கடந்த சில நாட்களாக இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பதற்றமான சூழ்நிலை நீடித்து வருகிறது.

இதன் பின்னணியில் பாகிஸ்தான் விமானப்படை தரைப்படை யுடன் இணைந்து ஒருங்கிணைந்த போர் ஒத்திகையை திடீரென்று நடத்தியது. ஜெட் ரக போர் விமானங்கள் இந்த ஒத்திகையில் பயன்படுத்தப்பட்டன. பாகிஸ்தான் விமானப்படை தளபதி தலைமை மார்ஷல் தார் பட், இந்த போர் ஒத்திகையில் பங்கேற்று பல்வேறு படைப்பிரிவுகளின் தயார் நிலையை மதிப்பீடு செய்தார். மேலும் அவர்,"எப்-16" ரக ஜெட் போர் விமானத்தில் பறந்து இந்த ஒத்தி கையில் ஈடுபட்டார். பாகிஸ்தான் இராணுவத்தின் 2ஆவது இடத்தில் இருக்கும் உயர் அதிகாரியான இணை தளபதிகள் கமிட்டி தலை வரான ஜெனரல் காலித் ஷமீம் வினி, இராணுவத் தலைமை தள பதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கியானி ஆகியோரும் போர் ஒத்திகை நிகழ்ச்சியை ஆய்வு செய்தனர்.

பின்னர் ஜெனரல் காலித் ஷமீம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காக இராணுவம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்து இருக்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத்தல்களை நாம் சந்தித்து வருவதால், உலகளாவிய புவி-அரசியல் சூழல் மற்றும் பிராந்திய அச்சுறுத்தல் நிலைமை சாதாரணமானவை மட்டுமின்றி, அதிக சவால்கள் நிறைந்ததாவும் உள்ளன. எனவே போருக்கு தயார் நிலையில் இருப்பது கூடுதல் முக்கியத்துவம் பெறுவதாகவும் அந்த அறிக்கையில் அவர் கூறி இருக்கிறார்.

# இந்திய மீனவர் அத்துமீறல் கண்டித்து நடைபயண பேரணி

## மன்னாரில் இன்று தொடக்கம்




இந்திய மீனவர்களின் அத்துமீறலால் மீன் வளம் அழிக்கப்படுவதை கண்டித்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் சார்பில் இன்று மன்னார், முள்ளிக்குளத்தில் இருந்து முல்லைத்தீவு வரை கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளதாக அவ்வமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

கடந்த 10.12.2012 அன்று யாழ்ப்பாணம் குருநகரில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. உண்ணாவிரதத்தின் 4 ஆம் நாள் (13.12.2012) அரசாங்கத்தின் உத்தரவின் பேரிலும் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் தலைவர்களின் அழைப்பின் பேரிலும் அங்கு வந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அளித்த வாக்குறுதியை அடுத்து ஒரு மாத காலக்கெடு வழங்குவதாக முடிவு எடுக்கப்பட்டதுடன் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமும் முடித்து வைக்கப்பட்டது.

இருந்த போதிலும் என்னாலும் வடமாகாண மீனவர் சங்க பிரதிநிதிகளாலும் அரசுக்கு கொடுத்த காலக்கெடு முடிவடைந்துள்ளது. ஆனால் எமது நோக்கம் இதுவரை காலமும் நிறைவேற்றப்படவில்லை. இருந்த போதிலும் என்ன நோக்கத்தை முன்வைத்தோமோ அந்த நோக்கத்தை அடையும்வரை நாம் ஓய்வெடுக்க முடியாது. கட்டுப்பாடில்லாத இந்திய மீனவப் படகுகளின் அத்துமீறலால் எமது கடல்வளம் அழிக்கப்படுகின்றது.

எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வேண்டும், எமது கரையோர இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும், எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டும் எனக் கோரி நடைப்பயண பேரணி இன்று மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கிராமத்தில் ஆரம்பித்து வடமாகாணம் முழுவதும் கரையோரமாக நகர்ந்து முல்லைத்தீவு, கொக்கிளாய் கிராமத்தில் முடிவுபெறும். பேரணியின் முடிவில் முல்லைத்தீவில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மாபெரும் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெறும். கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

### தாவடியில்...

போது மறைந்திருந்த திருடன் வீட்டுப் பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியுள்ளான். பெண்ணின் கூக்குரல் கேட்டு ஓடிவந்தவர்களால் திருடனைப் பிடிக்கமுடியவில்லை.

பகல் களவு, இரவுக் களவு என இருந்த திருட்டுக்கள் தற்போது அதிகாலையிலும் ஆரம்பித்திருப்பதனால் அப்பகுதி மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (137)

### நாளை...

மேலும் இரு புதிய துறைகளை உள்ளடக்க வாய்ப்பு உள்ளது என்றும் புதியவர்களுக்கு நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது பல புதிய பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் மேற்படி தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### இரும்பு...

கைதுசெய்யப்பட்டதோடு இராணுவத்தினரின் உதவியுடன் சடலம் கிடக்கும் இடமும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் காணப்படும் ஆபத்தான இடமாகையால் சடலம் நேற்றிரவு வரை மீட்கப்படவில்லை. இன்று இச்சடலத்தை மீட்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருப்பதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் தலைமறைவாகியிருக்கும் மற்றையவர் இறந்தவரின் உறவினர் என்றும் இவரும் முழங்காவிலைச் சேர்ந்தவர் என்றும் அறியவருகின்றது. (02,116)

### பிரான்ஸில்...

போது கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் வடமாராட்சி பருத்தித்துறையை சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் புதல்வரான சிவராசா (வயது - 46) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது உடலில் 10 வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன

இக்கொலை நடந்த பகுதியில் உள்ள பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இப்பெண் ஏற்கனவே பல குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் எனத் தெரியவருகிறது.

### எரிகாயங்களுக்குள்ளான...

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குறித்த மாணவி, வீட்டில் தாய் குளித்துக் கொண்டிருக்கையில் வேறு யாரும் இல்லாத சமயம் பார்த்து வீட்டின் அறைக்கதவை பூட்டி விட்டு இந்த செயலைப் புரிந்துள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கடுமையான தீக்காயங்களுக்குள்ளாகிய குறித்த மாணவி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது அங்கு சிகிச்சை பலனின்றி பி.ப. 3.30 மணியளவில் உயிரிழந்தார். (பா)

### அமெரிக்க...

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை வகித்தார்.

அமெரிக்கத் தூதுக்குழுவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசியா மற்றும் பசுபிக் விவகாரங்கள் பிரிவின் மூன்று வெளியுறவு பிரதிச் செயலாளர்கள் அங்கம் வகித்தனர்.

இந்தச் சந்திப்பு பற்றி தெரிவித்த சம்பந்தன், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி நாடு சுதந்திரம் பெற்ற நாள்தொடக்கம் இன்று வரை இடம்பெற்று வருகின்ற அநீதிகள், துயரங்கள், அறவழியில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அன்று நடத்திய போராட்டங்கள், அது பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறவேண்டிய நிர்ப்பந்தங்கள், முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரும் தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களை பறிகொடுத்து பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமரமுடியாமல் பாரம்பரிய பிரதேசங்களை பெரும்பான்மை இனத்திடம் பறிகொடுக்கும் நிலையில் எல்லோரும் கைவிட்ட நிலையில் அனாதரவாக வாழ்கின்ற அவல நிலை பற்றியெல்லாம் அமெரிக்கத்தூதுக்குழுவின் முன்னால் ஆதாரபூர்வமாக முன்வைத்தோம் என்றார்.

அமெரிக்க உயர்மட்டக்குழுவின் பதில் மிகவும் சிறப்பாக இருந்தது. விவரமாகச் சொல்ல முடியாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் தனது தலைமையிலான கூட்டமைப்புக்குழு ஒன்று தென்னாபிரிக்கா செல்கின்றது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

# சிவில் பாதுகாப்புக் குழுக்களின் மாதாந்த பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கான மாதாந்த பொதுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டீ. நீல் தளுவத்த பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

முல்லைத்தீவு அரச அதிபர் மா.வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், சிவில் குழுப் பிரதிநிதிகள் எனப் பலரையும் கலந்துகொள்ளுமாறு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜானக குணதிலக்க தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டின் முதலாவது மாதாந்த பொதுக்கூட்டம் இதுவாகும். (04)

# ஆணைக்குழு நியமிக்க கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட அதிகாரிகள், கடந்த காலங்களில் சேவையாற்றிய முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு சிரேஷ்ட நீதியரசர்கள் சிலர், அரசாங்கத்திடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

இந்த ஆணைக்குழுவானது ஓய்வுபெற்ற நீதியரசர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் சிரேஷ்ட நீதியரசர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி...

இந்தப் பயணத்தின் போது. பீகார் மாநில முதல்வர் நித்தீஸ் குமாரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

### அரசியல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. சில நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர் இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் அழுத்தங்கள் காரணமாக, சில நாடுகள் இலங்கை மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

வெளிநாடுகளில் உள்ளவர்களின் நோக்கங்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க இடமளிக்க முடியாது.

13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதா? இல்லையா? என்பது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமே தீர்வு காண முடியும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகளைத் தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதில் இணையவேண்டும். கூட்டமைப்பின் ஒத்துழைப்பின்றி தெரிவுக்குழுவின் பணிகளைத் தொடர முடியாது.

இலங்கை தொடர்பில் பல்வேறு அறிக்கைகளை வெளியிடாது நாட்டின் உண்மை நிலை தொடர்பாக கண்டறிய இலங்கை வருமாறு தமிழ் நாடு அரசியல் தலைவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சர் இதன்போது விளக்கமளித்தார்.

### கச்சதீவு உற்சவத்தை...

இக்கூட்டத்தை ஆரம்பித்துவைத்து தலைமையுரை ஆற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த 2012 ஆம் ஆண்டு வருடாந்த பெருவிழாவில் பங்குகொண்டவன் என்ற வகையில் அந்த அனுபவங்களைக் கொண்டு இவ்வருட உற்சவத்தை மேலும் சிறப்பாக நடத்த அனைவரினது ஒத்து ழைப்புக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். கச்சதீவு பெருவிழாவின் பிரதான ஏற்பாட்டாளர்களாக தேவாலய நிர்வாகத் தினருடன் நெடுந்தீவு பிரதேச செயலகம் பிரதேச சபை ஆகியவற்றுடன் பொலிஸார் உள்ளிட்ட கடற்படையினர் ஆகியோர் ஆளுநர் தலைமையிலான வடமாகாண சபையுடன் இணைந்து இம்முறை செயற்படுவார்கள் எனத் தெரிவித்தார்,

அதனைத் தொடர்ந்து துறைசார்ந்தோரது ஆலோசனைகளும் அங்கு பெற்றுக்கொள்ளப்பட்டன. இதன்பிரகாரம் உற்சவ காலத்தில் குறிகாட்டுவான் வரையில் விசேட போக்குவரத்து சேவை நடாத்தப்படும் என இலங்கைப் போக்குவரத்து சபையின் அதிகாரிகள் தெரியப்படுத்தினார்கள்.

குறிகாட்டுவான், கச்சதீவு பயணிகள் படகுச் சேவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் என அதன் உயரதிகாரிகள் தெரிவித்தபோது இறங்குதுறை பராமரிப்பு, பயணிகள் படகுச்சேவைத் தராதரம் என்பவற்றை முழுமையாக கவனத்தில் எடுக்குமாறும் தேவைப்பட்ட ஒத்துழைப்புக்களை கடற்படையினரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

உற்சவத்திற்கு ஒரு கிழமைக்கு முன்னதாகவே பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன கடற்படையினருடன் இணைந்து தேவாலய சுற்றுச் சூழலிலும் கச்சதீவிலும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மலசலகூடங்கள் அமைப்பு, குடிநீர் தாங்கிகள் பொருத்துதல் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் கடற்படையினரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

வழமைபோலவே நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் உணவு சிற்றுண்டிச்சாலைகளையும் அமைக்கும் எனவும் செஞ்சிலுவைச்சங்கம் முதலுதவி நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இம்முறை பெருவிழாவின்போது இந்திய, இலங்கை கடற்றொழிலாளரிடையேயான ஓர் நல்லுறவுச் சந்திப்பினை ஏற்படுத்துவதென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துக்கொண்டதுடன் இதுதொடர்பான இந்திய மீனவருக்கான தகவல்களை வழங்குமாறும் இந்திய உயர் ஸ்தானிகராலய ஆலோசகர் ரீ.ராஜமாணிக்கத்தை கேட்டுக்கொண்டார்.

பெருவிழா ஏற்பாட்டிற்கான ஆரம்ப அறிக்கையினை நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை மற்றும் தேவாலய நிர்வாகத்தினர் கச்சதீவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு சமர்ப்பிக்கும்படியும் அடுத்த கூட்டத்தில் அவ்விடயம் விரிவாக ஆராயப்படும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கச்சதீவு பெருவிழா தொடர்பான அடுத்த உத்தியோக ஏற்பாட்டுக் கூட்டத்தினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி மீண்டும் கூடுவதென இக்கூட்டத்தின் நிறைவில் தீர்மானிக்கப்பட்டு, பங்குகொண்ட அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்திசெய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட வட மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாகாணத்தில் சுமார் அயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கல்வி நிலையை மேம்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் வட மாகாணத்தில் நியமனம் பெற்ற சுமார் 400 ஆசிரியர்கள் வடமேல் மகாணத்தில் சேவையாற்றி வருகின்றமையும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் வெற்றிடம் நிலவுகின்ற கல்வி வலயங்களுக்கான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான விபரங்களை பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான விபரங்கள் அந்தந்த கல்வி அலுவலகங்களுக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு வட மாகாணத்தில் உள்வாங்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் அங்கு மாறறப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மீன்பிடியில் ஈடுபட்ட இளைஞர் வலிப்பு நோயால் மரணம்

(முல்லைத்தீவு)

தூண்டில் போட்டு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் வலிப்பு நோய் ஏற்பட்டு குளத்தினுள் வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சிலாவத்தை தாமரைக்குளத்தில் தந்தையும், மகனும் தூண்டில் இட்டு மீன்பிடித்துக்கொண்டிருக்கையில் தந்தை, பிடித்த மீன்களை விற்கச் சென்றார். அச்சமயத்தில் மகனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டதினால் இந்த பரிதாபச் சம்பவம் ஏற்பட்டதாக பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கைச் சேர்ந்த செல்வராசா ஜெசிந்தன் (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை ஸ்தலத்திற்கு வந்த முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு மாவடட நீதிபதி நேற்றிரவு சடலத்தை பார்வையிட்டதோடு சடலத்தை மீட்டு மரணவிசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டதையடுத்து மரண விசாரணைக்காக சடலம் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலை பிரரேத அறையில் நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தது.

(04)

# வீதியை செப்பனிட மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

நுணாவில் பருத்தித்துறை வீதி, மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்துள்ளதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நுணாவிலில் இருந்து கனகம்புளியடி சந்தியூடாக சரசாலை வரை சென்று பருத்தித்துறைக்குச் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

தற்போது சவகச்சேரி நகரசபையினால் இவ்வீதி புனரமைப்புச் செய்யப்பட்டது. கிடங்குகளுக்கு கற்கள் போட்டு தார் இடப்பட்டு செப்பனிடப்பட்டது.

அவ்வாறான சர்ந்தப்பத்தில் காணப்பட்ட சிறிய குழிகள் எல்லாம் தற்போது பாரிய குழிகளாக மாறியுள்ளன. இதனால் மோட்டார் வாகனங்ள், பேருந்துகள் மற்றும் பாரவூர்திகள் என நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணம்செய்யும் இவ்வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து காப்பட் இட்டு செப்பனிட்டு உதவவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(இ)

# அமெரிக்கப் பிரதிநிதிகளை எதிர்க்கட்சி சந்திக்கக் கூடாது

## தேசப்பற்றுள்ள இயக்கம் கோரிக்கை

இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர்கள் மூவருக்கும், எதிர்தரப்பு அரசியல் கட்சி உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்க கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டுக்கெதிரான சூழ்ச்சி நடவடிக்கைகளில் சில அரசியல் கட்சிகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் ஈடுபட்டு வருவதாக அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவ்வாறான தரப்புகளின் உறுப்பினர்கள் அமெரிக்க உயர் மட்ட பிரதிநிதிகளை சந்திப்பார்களாயின் மேலும் நெருக்கடியான நிலைமை ஏற்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சு தெரிவிக்கையில்.

ஜனநாயகத்தை கடைப்பிடிக்கும் நாடு என்ற வகையில் அமெரிக்க அதிகாரிகளுக்கு வரையறைகளை விதிக்க அரசாங்கத்திற்கு இயலாது என அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உதவி ராஜாங்க செயலாளர் குழுவில் நாட்டிற்கு முக்கிய ராஜதந்திர தொடர்புகளை முன்னெடுத்தவர்கள் அடங்குகின்றனர்.

அவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரை இலங்கையிலும் மாலை தீவிலும் சுற்றுக்களை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

அமெரிக்க தூதரக அறிக்கையின் படி அந்த அதிகாரிகள் இலங்கையின் உயர் மட்ட முக்கியஸ்தர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், மற்றும் குடியியல் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

# டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பரீட்சை வினாத்தாள்கள்

பரீட்சை வினாத்தாள் அச்சிடும்போது ஏற்படும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக, அவ்வினாத்தாள்களை "டிஜிட்டல்" தொழில்நுட்பத்தில் அச்சிடுவதான புதிய தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் ஜனந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

பரீட்சை வினாத்தாள் அச்சிடுவதிலிருந்து ஊழியர்களை நீக்குவதற்காகவும் அவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் அச்சிடுவதற்காகவும் இந்த டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதன்மூலம், ஒரு நபராலேயே பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், அச்சிடுதல் மற்றும் பொதியிடல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்துக்குத் தேவையான இயந்திரங்களை விரைவில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சொத்து விபரங்களை சமர்ப்பிக்க அமைச்சு செயலர்களுக்கு பணிப்பு

(கொழும்பு)

அமைச்சுக்களின் செயலர்களது சொத்து விபரங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்திடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அறிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ள ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சுக்களின் பிரதான கணக்காய்வாளர்களாகவுள்ள அவ்வமைச்சுக்களின் செயலாளர்கள் நீதியாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

# வர்த்தகரை காணவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியிலுள்ள கடையொன்றின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை பிற்பகலுக்குப் பின்னர் காணாமல் போயுள்ளார்.

கொக்குவிலில் மூன்று நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற சகோதரனின் திருமணத்திற்குச் சென்று விட்டு வியாழக்கிழமை நண்பகல் கரடிப்போக்குச் சந்தியிலுள்ள தனது கடைக்கு வந்த இவர் நண்பகலுக்குப் பின்னர் காணாமல்போயுள்ளார்.

இவருடன் உறவினர்களால் தொடர்புகொள்ள முடியாது போன அதேநேரம், இவரும் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் காரைநகர் களபூமியைச் சேர்ந்த தர்மலிங்கம் தவரூபன் (வயது 29) என்பவரே காணாமல் போயுள்ளார்.

# தேசிய மொழியில் இருமொழி கலப்பு; யோசனையை வரவேற்கும் ஜே.வி.பி

(கொழும்பு)

தேசிய கீதத்தில் இருமொழி கலப்புச் செய்வது தொடர்பாக அரசாங்கத்திற்குள் இருந்து முன்வைக்கப்படும் யோசனைகள் வெறும் ஏமாற்று வித்தையே எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி, அவ்வாறு உண்மையிலேயே தேசிய கீதத்தில் இருமொழிக் கலப்புச் செய்யப்படுமாகவிருந்தால் அதனை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத மேலும் தெரிவிக்கையில் தேசிய கீதத்தில் இரண்டு மொழிகளையும் இணைப்பது சிறந்த விடயமே. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், அதனை அரசாங்கம் கூறுவதைப் போல் நடைமுறைப்படுத்தும் என்பதில் சந்தேகமே.

நாட்டின் தேசிய கீதமென்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயமே. இதன்படி அதில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றால் நாடாளுமன்றத்தில் அனுமதி பெறவேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு எதனையும் செய்யப்போவதில்லை. மக்களை ஏமாற்றுவதறகாகக் கூறும் விடயமே தேசிய கீதத்தில் இரு மொழிக்கலப்பு.

இதேபோன்று கடந்த வருடத்தில் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இங்கு வந்து சென்றபோது, அந்த வருடத்தை மும்மொழி அபிவிருத்தி வருடமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. ஆனால், அது வெறும் பேச்சளவிலும் பிரசாரமுமாக மட்டுமே இருந்தது. கூறியது போல் ஒன்றும் நடக்கவில்லை.

இதேபோன்றே தேசிய கீத விடயமும். உண்மையில் அவ்வாறு இரு மொழிக் கலப்புச் செய்யப்படுமாகவிருந்தால் நாம் அதனை வரவேற்போம் எனத் தெரிவித்தார்.


## ஒப்புநோக்குநர்கள் உடனடியாகத் தேவை

பத்திரிகை அலுவலகத்தில் ஒப்புநோக்குநராக பணியாற்று வதற்குத் தகுதியானவர்கள் அப்பணியில் இணைத்துக் கொளளப்படவுள்ளனர்.

**தகுதிகள்:**

க.பொ.த. சாதாரணதர சித்தியுடன் க.பொ.த. உயர்தரத்தில் தமிழில் விசேட சித்தி

அல்லது

பத்திரிகைத் துறையில் ஒப்புநோக்குநர்களாக கடமையாற்றிய அனுபவம் அல்லது ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேற்படி தகுதி உடையவர்கள் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும முகவரியிலுள்ள தினமுரசு காரியாலயத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர், தினமுரசு.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.